REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
E Paper
மின்னிதழ்
2024 பெப்ரவரி 24 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 92 இல. 48 | Saturday 24, February, 2024 | 9பக்கங்கள் | 50/-

## போதைப்பொருள் குற்றம்; சிறைகளில் 1,500 சிறுவர்கள்



போதைப்பொருள் குற்றம் தொடர்பாக 1,000 முதல் 1,500 வரையான சிறுவர்கள் சிறைச்சாலைகளில் உள்ளதாக, சிறைச்சாலைகள் ஆணையாளர் ஜகத் சந்தன வீரசிங்க தெரிவித்தார்.

காலி, நாகொட பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் நடைபெற்ற 06

### இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அர்ப்பணிப்பு

# ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு அமெரிக்கா பாராட்டு

### செங்கடலில் இலங்கை அரசு வழங்கிய ஆதரவுக்கும் நன்றி தெரிவிப்பு



இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவுக்கும் (Richard Verma) இடையிலான சந்திப்பு நேற்று (23) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற போதே அவர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் உட்பட தற்போது மேற்கொள்ளப்படும் முக்கிய பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளருக்கு விளக்கமளித்தார்.

உலக பாதுகாப்பு தொடர்பான விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், செங்கடலில் இடம்பெறும் கடற்படை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய ஆதரவுக்கு பிரதி இராஜாங்க செயலாளர் நன்றி 06

## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பஞ்சரத பவனி இன்று



**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான மாசிமக மகோற்சவத்தின் பஞ்சரத பவனி இன்று (24) மிகச் சிறப்பாக நடைபெறுவதுடன், விசேட மண்டப பூஜைகளைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் உற்சவ மூர்த்திகள் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்கள்.

இந்நிலையில் நாளை மறுதினம் (26) காலை 7.00 மணிக்கு பாற்குட பவனியும் அதனைத் தொடர்ந்து தீர்த்தோற்சவமும் நடைபெறும். 27ஆம் திகதி காலை ஸ்ரீசண்டேஸ்வரி உற்சவமும் 06

### சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகள்

## கௌரவ நாமங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

### ஜனாதிபதியின் செயலாளர் அறிவுறுத்தல்



சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவ்வாறான கௌரவ நாமங்களை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

குறிப்பிட்ட ஒரு சில நியதிகளின் அடிப்படையில் உரிய செயன்முறைக்கமைய தெரிவு செய்யப்படும் சிறப்புக்குரிய இலங்கை பிரஜைகளுக்காக 06

## அமெரிக்க பிரதி இராஜாங்க செயலர் வர்மா–அமைச்சர் அலி சப்ரி சந்திப்பு



அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் வர்மா இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். கடந்த 22ஆம் திகதி முதல் நேற்று 23ஆம் திகதிவரை விஜயம் செய்த அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் மற்றும் தூதுக்குழுவினர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து 06

### உலகின் ஏனைய நாடுகளை போன்று

## சுற்றுலாத் தலங்களை மையப்படுத்தி இரவுநேர பொருளாதாரம் அவசியம்

### அந்நிய செலாவணியை 70% வரை அதிகரிக்கலாம்



இரவுநேர பொருளாதாரத்துக்கு மாறுவதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணியை சுமார் 70% வரை அதிகரிக்க முடியுமென, சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

அதற்காக சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரக்கூடிய இடங்கள் தொடர்பாக தற்போதுள்ள சட்டத்தையும் ஒழுங்குமுறைகளையும் திருத்தியமைத்து, தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமெனவும், 06



03

**எட்டு மாவட்டங்களில் அதிக உஷ்ண காலநிலை**

சில மாதங்களுக்கு தொடரும்

03

**நாட்டில் 40,000 போலி மருத்துவர்கள் இருப்பதாக GMOA குற்றச்சாட்டு**



03

அமரர் சனத் நிஷாந்த தொடர்பில்

**சிலரின் வெளிப்பாடுகள் கவலை அளிக்கிறது**

## இந்திய உயர்ஸ்தானிகர்–சிறிதரன் எம்.பி. சந்திப்பு



### ITAKயின் அடுத்த கட்ட நகர்வை விரைவுபடுத்துமாறும் அறிவுறுத்தல்

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கொழும்பிலுள்ள இந்திய இல்லத்துக்கு (India House) கடந்த புதன்கிழமை (21) பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அழைத்து கலந்துரையாடினார். இதன்போது, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக சிறிதரன் எம்.பி. தெரிவு செய்யப்பட்டமைக்காக உயர்ஸ்தானிகர் 06

### 'இந்தியத் தமிழரா?, மலையகத் தமிழரா'?

## விவாதத்தை ஒத்திவைத்துவிட்டு சமநிலை அடையாளத்தை ஏற்போம்



'இந்தியத் தமிழரா, மலையகத் தமிழரா' என்ற விவாதத்தை இப்போது ஒத்திவைத்துவிட்டு, இம்முறை சனத்தொகைகணக்கெடுப்புக்கு 'இந்தியத் தமிழர்/ மலையகத் தமிழர்' என்ற சமநிலை 06

### துருக்கி, அங்காராவில் ILC

## பொதுச் சபைக் கூட்டத்தில் வடிவேல் சுரேஷ் MP பங்கேற்பு



துருக்கியின் தலைநகரமான அங்காராவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் (International Labor Conference ) முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கையையும் மலையக மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் பங்கேற்றுள்ளார்.

பல நாடுகளைச் சேர்ந்த பல மொழிகள் பேசுகின்ற தொழிற்சங்கவாதிகளும் அரசியல் பிரமுகர்களும் இந்நிகழ்வில் 06

### முல்லைத்தீவு, புதுமாத்தளனில்


## மணல் அகழ்வதாகக் கூறி புதையல் தோண்டிய நபர்கள்



முல்லைத்தீவு, புதுமாத்தளன் பிரதேசத்தில் வீதி திருத்த வேலைக்காக மணல் அகழ்வதாகக் கூறி புதையல் தோண்டிய 4 சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (22) பொலிஸார் 06

## பண்டிகைக் காலத்துக்காக மூன்று கோடி முட்டைகள்

### இந்தியாவிலிருந்து இறக்குமதி



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்தியாவிலிருந்து மேலும் 03 கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடையில் 06

## தோட்டத் தொழிலாளரின் சம்பளம் 1,700 ரூபாவாக வழங்க வேண்டும்



### சம்பள நிர்ணய சபைக்கு இ.தொ.கா. முன்மொழிவு

**கொழும்பு தினகரன் நிருபர்**

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படைச் சம்பளமாக 1,700 ரூபா வழங்க வேண்டுமென்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சம்பள நிர்ணய சபைக்கு முன்மொழிந்துள்ளதாக, இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இ.தொ.கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பை இ.தொ.கா. 06

## அமெரிக்காவின் முதல் தனியார் விண்கலம் நிலவை தொட்டது

### 'ஒடிஸியஸ்' தென் துருவத்தில் இறங்கியதாக அறிவிப்பு



அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் இயங்கி வரும் தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனம், நாசாவின் உதவியுடன் ஒடிஸியஸ் என்ற விண்கலத்தை அனுப்பி நிலவின் தென் துருவம் அருகே தரையிறங்கியுள்ளது.

இந்த விண்கலத்திலிருந்து சமிக்ஞை கிடைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலவின் மேற்பரப்பை தொட்ட முதல் 06

### மீனவர் பிரச்சினை தீர்வுக்கு

## இந்திய–இலங்கை கூட்டுப்பணிக்குழு கூட்டத்தை உடன் நடத்த வலியுறுத்து

### 10 படகுகளை கொண்டுவர மீட்புக்குழு இலங்கை செல்ல அனுமதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை

### தமிழக அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை



**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

இலங்கையில் கைப்பற்றப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளில் மீட்கும் நிலையிலுள்ள 06

### கலஹா தோட்ட குடியிருப்புக்குள்

## 5½ மாதக் குழந்தையை கைவிட்டு வெளிநாடு சென்றுள்ள இளம் தம்பதி

### மட்டு. வாகரையை சேர்ந்தவர்களென தகவல்



கலஹா லூல் கந்துர தோட்டத்திலுள்ள குடியிருப்பு அறையொன்றில் தற்காலிகமாக வசிப்பதற்காக வந்த இளம் தம்பதியினர், சுமார் 5 1/2 மாதக் குழந்தையொன்றை வீட்டில் தனியாக கைவிட்டு வெளிநாடு சென்றுள்ள 06




## இந்திய வீடமைப்பு திட்டம்

# பொருத்தமான இடத்தை ஒதுக்கிதருமாறு நேஸ்பி தோட்ட மக்கள் கோரிக்கை

நுவரெலியா களனிவெளி பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனிக்கு கீழ் இயங்கும் பீற்று தோட்டப்பிரிவுக்குட்பட்ட நேஸ்பி தோட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக கடந்த மூன்று நாட்களாக பணி நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மலையக பெருந்தோட்ட மக்களுக்கு கிடைத்த 10 ஆயிரம் தனி வீடுகள் அமைக்கும் திட்டத்தில் ஆரம்பகட்டமாக நிர்மாணிக்கப்படவுள்ள 1300 தனி வீடு திட்டத்தில் நுவரெலியா நேஸ்பிதோட்ட மக்களுக்கும் தனி வீடுகள் கிடைக்கவுள்ளன. இந்நிலையில் 53 வீடுகளுக்கு நேஸ்பி



தோட்டத்தில் 05 ஏக்கரை கொண்டுள்ள இலக்கம் 02 தேயிலை மலையில் வீடுகள் அமைக்க தோட்ட நிர்வாகம் இடம் ஒதுக்கி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேநேரத்தில் நுவரெலியா நேஸ்பி தோட்டம் இயற்கை அழகை ரசிக்கக் கூடிய இடமாகும்.

இந்நிலையில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இத்தோட்ட தொழிலாளர்களுக்கும் 53 வீடுகள் கட்டித் தருவதாக கூறப்பட்டுள்ளது. அவ்வீடுகளை போக்குவரத்து, குடி நீர், மின்சாரம் மற்றும் சகல வசதிகளுக்கும் ஏதுவான இலக்கம் 02 தேயிலை மலையில் ஒரே கிராமமாக அமைத்து கொடுக்க இடத்தை ஒதுக்கி தருமாறு தோட்ட நிர்வாகத்திடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளனர்.

எனினும் இதை தோட்ட நிர்வாகம் அலட்சியப்படுத்தி வருவதுடன், தோட்ட மயானம் அமைந்துள்ள தேயிலை மலையில் வீடுகட்ட இடம் தருவதாக நிர்வாகம் கூறியுள்ளதாக தொழிலாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

**ஆ. ரமேஷ்**

# ரதெல்ல குறுக்கு வழி வீதியில் பஸ் குடைசாய்ந்து விபத்து; 8 பேர் காயம்



**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

நானுஓயா ரதெல்ல குறுக்கு வழி வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 8 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரதெல்ல குறுக்கு வழி வீதியில் பஸ் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் காயமடைந்த 8 பேர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாத்தறை பிரதேசத்திலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பஸ் வண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

பஸ்வண்டிக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேரர் சுட்டுக்கொலை; இளம் பெண் கைது

மல்வத்துஹிரிபிட்டிய, கஹடான ஸ்ரீ ஞானராம விகாரையின் தேரர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இளம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபருக்கு உதவியமை மற்றும் உண்மையை மறைத்த குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரலகங்வில – வெரகல பிரதேசத்தில் வைத்து சந்தேகநபரான பெண் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான பெண், வெரகல –தேவகல பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

# ராவணா எல்ல பகுதியில் நபரொருவர் பலி

எல்ல பிரதேசத்துக்கு சென்ற நபர் ஒருவர் நேற்றிரவு (22) எதிர்பாராதவிதமாக விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை நண்பர் ஒருவருடன் எல்ல மலைத் தொடரில் ஏறி மாலையில் அதிலிருந்து கீழே இறங்கிய போது பள்ளமொன்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



32 வயதுடைய நபர் பொரகொல்ல பேருவளை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

ராவணா எல்ல பிரதேசத்தில் இருந்து தவறி விழுந்த நபர் வெல்லவாய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



பொலிஸ் சேவையில் 33 வருடங்கள் சேவையாற்றி ஓய்வு பெறும் மலையகத்தைச் சேர்ந்த லக்ஷ்மன் தென்னரசை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. பதுளை மாவட்டம் பசறையை பிறப்பிடமாக கொண்ட அவர் மிகவும் எளிமையான குடும்பத்தைச் சேர்ந்தவர். இலங்கையில் பல இடங்களிலும் எந்தவித பாகுபாடுமின்றி சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கின் உதயம்

# நகைத்திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

**(பருத்தித்துறை விசேட நிருபர்)**



யாழ்ப்பாணம் – கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த்திருவிழாவில் நகைத்திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்று காலை இடம்பெற்றபோது பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்தனர். இதனை சாதகமாக பயன்படுத்தி நகைத் திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கொழும்பு கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவருகின்றது.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இருவரும் 15 நிமிடத்தில் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து நான்கரை பவுண் தாலி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இருவரையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தலைமன்னார் இறங்குதுறையில் மணல் அகழ்வு; தடுத்து நிறுத்திய பொதுமக்கள்



**(மன்னார் குறூப் நிருபர்)**

தலைமன்னார் இறங்குதுறை பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (22) மாலை மணல் அகழ்வில் ஈடுபட்ட குழுவினருக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். தலைமன்னார் இறங்குதுறை,தலைமன்னார் ஊர் மனை,தலைமன்னார் ஸ்டேஷன் பகுதி மக்கள் ஒன்றிணைந்து கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தலைமன்னார் பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு சென்றிருந்தனர்.

எவ்வித அனுமதியும் இன்றி மக்களுக்கு எவ்வித அறிவுறுத்தல்களும் வழங்கப்படாமல் மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக சகல ஆயத்தங்களுடனும் இக்குழுவினர் வருகை தந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். அப்பகுதிக்கு வருகை தந்த மணல் பரிசோதனை குழுவினர் தாங்கள் ஒரு ஒப்பந்த நிறுவனம் என தெரிவித்துள்ளனர். அத்துடன் தமது ஒப்பந்தத்தையும் காண்பித்து உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து அக்குழுவினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வந்த தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனிமையில் வசித்த பெண் சடலமாக மீட்பு

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் வடக்கு பகுதியில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (22) காலை அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை ஜெகதீஸ்வரி (வயது 66) என்ற வயோதிபப்பெண் என தெரியவருகின்றது.

திருமணமாகாத அவர் தனிமையில் வசித்து வந்துள்ளதாக தெரியவருகின்றது. அவருக்கு வெளித்தொடர்புகள் எதுவும் இருக்கவில்லையெனவும் தெரியவருகின்றது. அயல்வீட்டுக்காரர்கள் துர்நாற்றம் வீசியமையால் மதிலால் ஏறி உள்ளே சென்று பார்த்த போது அவர் அழுகிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் ஆகியோர் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது ஆறு நாட்களுக்கு முன்னர் அவர் உயிரிழந்ததாக சட்ட வைத்திய அதிகாரி கூறியுள்ளார். சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# யாழில் வாள் வெட்டு இருவர் காயம்

**(யாழ் விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வீடொன்றில் நுழைந்த வன்முறை கும்பல் வீட்டை சேதப்படுத்தியதுடன் இருவர் மீது வாள் வெட்டு தாக்குதலையும் நடத்தியுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த சகோதரர்களான 44 மற்றும் 45 வயதான இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர். காயமடைந்த இருவரும் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட முரண்பாடே வன்முறைக்கான காரணம் என சந்தேகிக்கும் அச்சுவேலி பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா மாவட்டத்தில் கடந்த 05 வருடங்களில் 67 யானைகள் பலி

**(வவுனியா நிருபர்)**

வவுனியா மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2024 வரை 67 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா உட்பட வனத்தை அண்மித்த பகுதிகளிலில் அனுமதியற்ற சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கியும், வெங்காய வெடி, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியும் (சட்டவிரோத துப்பாக்கி) புகையிரத விபத்துக்களாலும் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

மேலும் 05 வயது தொடக்கம் 40 வயதுடைய யானைகளே இவ்வாறு பலியாகியுள்ளன.

இதேவேளை இவ்வருடம் இதுவரை 03 யானைகள் பலியானதுடன், கடந்த வருடம் 17 யானைகள் வரை பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்சிலிருந்து இறங்க முற்பட்டவர் தவறி வீழ்ந்து உயிரிழப்பு

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் பஸ் மிதிபலகையிலிருந்து இறங்க முற்பட்ட ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை விபத்து நடைபெற்றது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாணவர்களுக்கு உதவி

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தரம் 01 இல் புதிதாக இணைந்துகொண்ட 46 மாணவர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 52 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தரம் 1 இற்கு புதிதாக இணைந்த மாணவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து விருந்தினர்களுடன் வரவேற்கப்பட்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவிகளை வழங்கி வைத்தார். இதில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.





தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 பெப்ரவரி 24 சனிக்கிழமை
தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
ளுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் மாசி 12
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# முற்போக்கு பயணத்தின் சிறந்த பலமாக அமைந்தவர் சனத்

## அனுதாபப் பிரேரணையில் பிரதமர் தினேஷ்

லோரன்ஸ் செல்வநாயகம்

அமரர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் அரசியல், சமூக மற்றும் மக்கள் சேவை முற்போக்கு பயணத்திற்கு சிறந்த பலமாக அமைந்ததாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இரவு, பகல் பாராது அவர் மக்களுக்காக சிறந்த சேவையை வழங்கியவர் என தெரிவித்த பிரதமர், அதனால் மக்கள் மத்தியில் அவருக்கு பெரும் கௌரவம் மற்றும் பிணைப்பு காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு மனிதராக அவரைக் குறிப்பிட முடியும் என குறிப்பிட்ட பிரதமர், அரசியல் காரணமாக அவர் மற்றும் அவரது குடும்பம் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் சொத்துகளை இழப்பதற்கும் அதுவே காரணமானதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சனத் நிஷாந்தவின் அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



சபையில் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர்,

"சனத் நிஷாந்த, நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சராக பல்வேறு கிராமிய நீர் விநியோக திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து வந்தவர். அது தொடர்பில் என்னுடன் அவர் அண்மையில் பேச்சுவார்த்தையொன்றையும் மேற்கொண்டிருந்தார். அவரது அரசியல், சமூக மற்றும் மக்கள் சேவை மிகவும் பலமானதாக அமைந்தது.

எமது அரசாங்கத்திற்கும் பொதுஜன பெரமுன கட்சிக்கும் புத்தளம் மாவட்ட மக்கள் மற்றும் வடமேல் மாகாண மக்களுக்கும் பாரிய சேவைகளை முன்னெடுத்தவர் அவர். அது மட்டுமன்றி இராஜாங்க அமைச்சராக முழு நாட்டிற்கும் அவர் சிறந்த சேவையை வழங்கியுள்ளார்.

குறிப்பாக புத்தளம் மாவட்ட மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் மத ரீதியான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அவர் அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளார்" என்றார்.

# தவக்கால சிந்தனை



## சட்டத்தின் நிறைவே அன்பு

சட்டத்தின் நிறைவே அன்பாகும். மோசேக்கு கடவுள் கூறிய வார்த்தைகள் "உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும்அன்பு கூர்வாயாக" (லேவி. 19:18).

அவ்வாறே மோசே கடவுளின் பதிலாளாக கடவுளிமிருந்து பின்வரும் வார்த்தைகளையும் தருகிறார். "இஸ்ரயேலே செவிகொடு. நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத்தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!" (இசை. 6:45).

இன்றைய இணைச்சட்ட நூலின் முதலாம் வார்த்தையூடாக மோசே அத்தகைய அன்பு கடவுளுக்கு பிரியமானதாக இருக்கும் என்கிறார்.

கடவுள் என்றும் பிரமாணிக்கமாயிருப்பார். மனிதர்கள் அனைவர் மத்தியிலும் அவர்களை பெரிய இனமாக மாற்றுவார். "கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றவர்கள்" என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார்.

சட்டத்தின் நிறைவே அன்பாகும். இன்றைய நற்செய்தியில் இயேசு தமது வருகையின் நோக்கம் சட்டத்தை அழிக்கவல்ல மாறாக அதனை நிறைவேற்றவும் மேலும் இறை தந்தையின் பார்வையில் அதனை முழுமைப்படுத்தவுமே என்கிறார்.

21ஆம் நூற்றாண்டில் இயேசுவின் உண்மைச் சீடர்களாக, அவரைப் பின்பற்றுவர்களாக வாழ விரும்புகின்ற நமக்கான உண்மையான சோதனை யாதெனில்,யாரை அன்பு செய்ய நமக்கு கடினமானதாக உள்ளதோ அவர்களை அன்பு செய்வதேயாகும்.


நாம் நேசிக்க வேண்டியவர்கள் அவர்களே என்று இயேசு நமக்கு அழைப்பு விடுக்கின்றார். நமக்கு தீங்கு செய்ய விரும்புபவர்கள் அநீதி இழைப்பவர்கள் இவர்களைத் தான் நாம் நமது இறைவேண்டலில் கொண்டுவர வேண்டும். அங்கேதான் நிறைவுக்கான பாதையுள்ளது. சட்டத்தின் நிறைவே அன்பு. அப்படியே ஆகட்டும்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)



ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் ஆண்டு விழா அதன் தலைவர் பிரபா கணேசன் தலைமையில் கொழும்பு ஜிந்துப்பிட்டி நீதிராஜா மண்டபத்தில் நேற்று (23) நடைபெற்றது. மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நல்லையா குமர குருபரன், கொழும்பு நகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அப்துல் ஜப்பார் மறைவுக்கு ஹக்கீம் எம்.பி. அனுதாபம்



பாராளுமன்றத்தில் உரைபெயர்ப்பாளராக கடமையாற்றி ஓய்வு பெற்ற அட்டாளைச்சேனையைச் சேர்ந்த அப்துல் ஜப்பார் மறைவுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கவலை வெளியிட்டுள்ளார். அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது,

"மூன்று தசாப்தங்களுக்கு அண்மித்த காலமாக பாராளுமன்றத்தில் சமகால உரை பெயர்ப்பாளராக கடமையாற்றிய அப்துல் ஜப்பார், ஓய்வு பெறும் போது பிரதான ஆங்கில தமிழ் உரை பெயர்ப்பாளராகவும் இருந்தார். இலகுவாக விளங்கும் வகையில் அவரது மொழிபெயர்ப்புகள் இருந்தன.

மிகவும் அமைதியான சுபாவத்தையுடைய அவர், சிறந்த பண்புடையவராவார். அன்னாரின் பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆறுதல் தெரிவிக்கிறேன்" என்றார்.

# ரூ.30 இலட்சம் பெறுமதி சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது

நாட்டுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட 30 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் பாணந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய ஒருவர் ஜாஎல கலால் வரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஜாஎல கலால் வரித் திணைக்களத்தினரால் நடத்தப்பட்ட சோதனையின் போது, இந்த E சிகரெட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட E சிகரெட்டுகளால் அரசாங்கத்துக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக, ஜாஎல கலால் வரித் திணைக்கள அத்தியட்சகர் தெரிவித்தார்.

இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் பலர் சிகரெட்டுகளுக்கு அடிமையாகியுள்ளமை தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த அவர், இது மிகவும் ஆபத்தான விடயமெனவும் சுட்டிக்காட்டினார்.

## அமரர் சனத் நிஷாந்த தொடர்பில்

# சிலரின் வெளிப்பாடுகள் கவலை அளிக்கிறது

## அனுதாபப் பிரேரணையில் அமைச்சர் ஜீவன்

லோரன்ஸ் செல்வநாயகம்



தமது கருத்து, கொள்கைக்கு இணங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிறந்த அரசியல்வாதி சனத் நிஷாந்த என்றும் அந்த அர்ப்பணிப்பை நாம் மதிக்க வேண்டும் எனவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அவரது மரணத்தின் பின்னர் அவர் தொடர்பில் வெளியிடப்பட்ட சில கருத்துகள் கவலை கொள்ளத்தக்கவை என தெரிவித்த அமைச்சர், பௌத்த மதம் உள்ளிட்ட எந்த மதங்களும் அவ்வாறு போதிக்கவில்லை என்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று அமரர் சனத் நிஷாந்தவின் அனுதாபப் பிரேரணையில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

"சனத் நிஷாந்த நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சராக சிறந்த சேவையை வழங்கியவர்.

கிராமியமட்ட மக்களின் மனங்களை வென்றவர். அவருடைய அர்ப்பணிப்புள்ள சேவையும் கண்ணியமும் பாராட்டத்தக்கவை.

உண்மையில் அவர் சிறந்த திறமை படைத்தவர். அவரது நான்கு பிள்ளைகளுக்கு சிறந்த தகப்பனாகவும் அவரது மனைவிக்கு சிறந்த கணவராகவும் நாட்டுக்கும் கௌரவமான வகையில் சேவை செய்த சிறந்த மனிதராக அவரைக் குறிப்பிட முடியும்.

06



தமிழ்நாட்டு அரசாங்கத்தின் தமிழ் செம்மல் விருது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சுவாமிநாதனால் வழங்கி வைக்கப்பட்டது. வி.ஜி.பி. உலக தமிழ் சங்கத் தலைவரும் வி.ஜி.பி. குழுமத் தலைவருமான வி.ஜி.சந்தோசம் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ந.அருள் ஔவை ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# எட்டு மாவட்டங்களில் அதிக உஷ்ண காலநிலை

## சில மாதங்களுக்கு தொடரும்

நாட்டின் 08 மாவட்டங்களில் அதிக உஷ்ணமான காலநிலையை எதிர்பார்ப்பதுடன், இந்த நிலைமை எதிர்வரும் சில மாதங்களுக்கு தொடருமென்று எதிர்பார்ப்பதாகவும், வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம், குருநாகல், ஹம்பாந்தோட்டை, அநுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலேயே அதிக உஷ்ணமான காலநிலை நிலவுமென்று எதிர்பார்ப்பதாகவும், வளிமண்டலவியல் திணைக்களத்தின் முன்னெச்சரிக்கை பிரிவுக்கான பிரதிப் பணிப்பாளர் அஜித் விஜேமான்ன தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களில் மனித உடலால் தாங்கிக்கொள்ளக்கூடிய வெப்பத்தை விட, அதிக உஷ்ணம் நிலவுமெனவும், அவர் கூறினார்.

நாட்டில் காற்றின் அளவு குறைந்துள்ளமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், அதிக உஷ்ணத்திலிருந்து பொதுமக்கள் தம்மை பாதுகாக்க வேண்டுமெனவும் கூறினார்.



06

# அமரர் நீலகண்டனின் 6ஆவது வருட நிறைவு; நினைவுப் பேருரை

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் கந்தையா நீலகண்டனின் ஆறாவது வருட நிறைவின் நினைவுப் பேருரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25) முற்பகல் 10.00 மணிக்கு கொழும்பு, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் அபிராமி கயிலாசபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அருளாளராக யாழ். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு, 'அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் மீதான ஒரு பிரதிபலிப்பு' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

# நாட்டில் 40,000 போலி மருத்துவர்கள் இருப்பதாக GMOA குற்றச்சாட்டு

நாட்டி 40,000 க்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் உள்ளதாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் (GMOA) ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

இவ்வாறான வைத்தியர்கள் ஆபத்தான நிலையில் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

வைத்திய உதவியாளர்கள், தாதியர்கள் அல்லது துணை வைத்திய சேவைகளில் அங்கம் வகிக்கும் ஒருவர் வைத்தியர் போன்று தன்னை அடையாளப்படுத்தி, அவர்கள் இருக்கும் பிரதேசங்களிலோ அல்லது தமது சொந்த இடங்களிலோ நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

இலங்கையின் சுகாதார அமைப்புக்குள், நோயாளர் ஒருவருக்கு மருந்துகளை பரிந்துரைக்கும் திறனும் பொறுப்பும் அதிகாரமும் வைத்தியருக்கு மாத்திரமே உண்டு. இவ்வாறு செய்யக்கூடிய திறனோ அல்லது அதிகாரமோ வேறு எவருக்கும் கிடையாதெனவும், அவர் சுட்டிக்காட்டினார்.

# ஐக்கிய காங்கிரஸின் உயர்பீடக் கூட்டம்

ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் விசேட உயர்பீட மற்றும் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை (28) கல்முனையில் நடைபெறவுள்ளதாக, அக்கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறவிருந்த இந்தக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டதாகவும், ஆயினும் 28ஆம் திகதி கூட்டம் நடைபெறுமெனவும், அவர் தெரிவித்தார்.

கட்சிக்கு எதிராக செயற்படும் சில உறுப்பினர்கள் தொடர்பாக விசாரித்து தீர்மானம் நிறைவேற்றல், புதிய உயர்பீடம் மற்றும் நிர்வாக சபைத் தெரிவு ஆகியன இதன்போது முன்னெடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் கூட்டத்தில் கட்சியில் 2023ஆம் ஆண்டுக்கான உயர்பீட உறுப்பினர்கள் சகலரும் கலந்துகொள்ளுமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

## பொறியியல், நிர்மாணத்துறையில்

# அனர்த்த முகாமைத்துவம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்

பொறியியல் மற்றும் நிர்மாணத் துறைகளில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அதிகளவில் கவனம் செலுத்தப்பட வேண்டுமென, வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறிவுறுத்தினார்.

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கத்தின் வடபிராந்திய சங்கத்தால் நடத்தப்பட்ட 'தொழில்நுட்ப வழிகாட்டி' நூல் வெளியீட்டு விழா, வடமாகாண பிரதம செயலாளர் செயலகத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர், நூலின் முதல் பிரதியை விசேட விருந்தினரான மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவுக்கு வழங்கி வைத்து உரையாற்றினார்.



இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

"பொறியியல் மற்றும் கட்டுமானத் துறைகளில் திட்டமிடல் மிக முக்கியமானதென்பதுடன், உரிய திட்டமிடல் காணப்படாமையால் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. காணி உரிமை தொடர்பான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்ளாமை மிகப் பிரதான சிக்கலாக உள்ளது. காணி உறுதியை உறுதிப்படுத்துவதும் பிரதேச செயலாளரிடம் அனுமதி பெறுவதும் இன்றியமையாத விடயங்களாகும். இவற்றினூடாக தேவையற்ற சவால்களை தவிர்க்க முடியும்.

அத்துடன், அனர்த்தங்கள் தொடர்பான பகுப்பாய்விலும் முன்னரே ஆராய்தல் மிக முக்கியமானதாக உள்ளது. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான எவ்வித முன் ஆய்வுமின்றி நிர்மாணம் மேற்கொள்ளப்படுவதால், தேவையற்ற அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. உரிய திட்டமிடலின்றி முன்னெடுக்கப்படும் கட்டட நிர்மாணம் காணப்படும் இடங்களில் மழைக் காலத்தில் வெள்ளம் தேங்குகிறது.

ஆகையால் மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் கட்டட நிர்மாணம் முக்கியமானதாகும். திட்டமிடல்களின் போது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். அதேவேளை பயனாளர்களின் நலன் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும்" என்றார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 12ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 13



**குறள் தரும் சிந்தனை**

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்

தமக்குரிய கடமைகளைக் கண்ணியத்துடன் ஆற்றுகின்ற சான்றோர் எல்லாக் கடல்களும் தடம்புரண்டு மாறுகின்ற ஊழிக்காலம் ஏற்பட்டாலும்கூடத், தம்நிலை மாறாத கடலாகத் திகழ்வார்கள்.

# கடும் உஷ்ணக் காலநிலைக்கு முன்பாக மக்களின் பொறுப்பு

நாட்டில் கடும் உஷ்ணத்துடன் கூடிய காலநிலை நிலவி வருகிறது. இதன் விளைவாக வரட்சி நிலைமையும் ஏற்பட்டுள்ளது. நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைவடைந்து வருகிறது. இதன் விளைவாக உள்நாட்டு நீர் மின்னுற்பத்தி கூட சுமார் 20 வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனை இலங்கை மின்சார சபை அண்மையில் உறுதிப்படுத்தி இருக்கிறது. அந்தளவுக்கு கடுமையான உஷ்ண காலநிலை தற்போது நாட்டில் நிலவுகிறது.

அதன் காரணத்தினால் உஷ்ணத்தின் தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு ஏற்ப நாட்டின் சில மாவட்டங்களது மக்களுக்கு முன்னெச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டிருக்கின்றன. வளிமண்டலவியல் திணைக்களம் இது தொடர்பில் விடுத்துள்ள முன்னெச்சரிக்கையில், வடமேல், வட மத்திய மாகாணங்களிலும், கம்பஹா, கொழும்பு, ஹம்பாந்தோட்டை, மொனறாகலை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் கடும் உஷ்ண நிலை காணப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இதன் தாக்கத்தை மனித உடலால் உணரக் கூடியதாக இருக்கும்.

இந்த கடும் உஷ்ண காலநிலைப் பகுதியில் திறந்த வெளியில் வேலைகளில் ஈடுபடும் போது உடலில் வியர்வை அதிகளவில் வெளிப்படும். அதன் வினைவாக சோர்வு நிலை ஏற்படலாம். அத்தோடு உடலில் நீரிழப்பு ஏற்படும். அதன் ஊடாக தசை பிறழ்வு தோற்றம் பெறலாம். அத்தோடு சோர்வு நிலையும் அதிகரிக்க முடியும். இவற்றை கருத்தில் கொள்ளாது தொடர்ந்தும் வெயிலில் வேலைகளில் ஈடுபடும் போது உடல் உஷ்ண நிலை ஒழுங்குபடுத்தலில் நெருக்கடிகள் ஏற்பட முடியும். அதனால் கடும் உஷ்ணம் காரணமாக ஏற்படக்கூடிய பக்கவாதம் கூட ஏற்படலாம். அதன் காரணத்தினால் அதிக உஷ்ணத்தினால் உடலாரோக்கியத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், தாக்கங்களை தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இது மிகவும் முக்கியமான விடயம். இவ்விடயத்தில் ஒவ்வொருவரும் அக்கரை கொள்வது அவசியம்.

அந்த வகையில் இந்த கடும் உஷ்ணக் காலப் பகுதியில் உடலில் ஏற்படக்கூடிய நீர் இழப்பை ஈடுசெய்து கொள்வதற்கு ஏற்ப அடிக்கடி நீரைப் பருகுவது மிகவும் முக்கியமானதாகும். குறிப்பாக பணியிடங்களில் நீரைப் போதியளவில் பருகுவதற்கு தவறலாகாது. அத்தோடு நிழல் தரக்கூடிய இடங்களில் முடிந்த வரையில் ஓய்வு எடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

அதேநேரம் வீடுகளில் இருக்கும் முதியவர்கள் மற்றும் நாட்பட்ட நோயாளர்களின் நலன்கள் குறித்தும் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டிய காலமிது. ஏனெனில் இந்த உஷ்ணம் அவர்களது ஆரோக்கியத்திலும் தாக்கம் செலுத்தக்கூடியதாக இருக்க முடியும். மேலும் உஷ்ணக் காலப்பகுதியில் சிறு குழந்தைகளை வாகனங்களில் அழைத்துச் செல்லும் போது அவர்களை வாகனங்களில் தனியாக இருப்பதற்கு அனுமதிக்கக் கூடாது. அத்தோடு வெள்ளை மற்றும் வெளிறிய நிறம் கொண்ட இலகுவான ஆடைகளை இக்காலப்பகுதியில் அணிந்து கொள்ளவும் வேண்டும்.

அதிக உஷ்ண காலநிலை நிலவும் இக்காலப் பகுதியில் இவ்வாறான அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுவது மிகவும் அவசியம். மருத்துவ நிபுணர்களின் அபிப்பிராயமும் அதுதான். அதன் ஊடாக கடும் உஷ்ணம் காரணமாக ஆரோக்கிய ரீதியில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் தாக்கங்களையும் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அதேநேரம் தற்போதைய கடும் உஷ்ணம் குறித்து கவனயீனமாகவோ அசிரத்தையோடோ நடந்து கொள்ளவும் கூடாது. அவற்றின் விளைவான தாக்கங்களை சாதாரணமாக நோக்கவும் முடியாது. ஏனெனில் கடும் உஷ்ணம் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்களும் பாதிப்புக்களும் மிக மோசமானவையாக வெளிப்படுவதோடல்லாமல் உயிரிழப்பையும் கூட ஏற்படுத்தி விடக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் கூட அதிக உஷ்ணம் காரணமாக வருடா வருடம் பலர் உயிரிழப்பதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும். இப்போது தான் இங்கு கடும் உஷ்ணக் காலநிலை ஆரம்பமாகி இருக்கிறது. இக்காலநிலை அடுத்துவரும் இரண்டொரு மாதங்களுக்கு நீடிக்க முடியும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டிருக்கிறது.

ஆகவே இந்த உஷ்ண காலநிலை தொடர்பில் முன்னவதானத்துடன் செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அத்தோடு இக்காலப்பகுதியில் மருத்துவர்களின் வழிகாட்டல்களை கருத்தில் கொண்டு செயற்படவும் தவறலாகாது. அப்போது கடும் உஷ்ணக் காலநிலையின் விளைவான தாக்கங்களையும் பாதிப்புக்களையும் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# உலகத் தாய்மொழி தினத்தில் திருச்சியில் தமிழறிஞர்களுக்கு தமிழ்மாமணி விருது



உலகத் தாய்மொழி நாளை முன்னிட்டு திருச்சி நந்தவனம் அறக்கட்டளை சார்பில் தமிழறிஞர்கள் தமிழ் மாமணி விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டனர், திருச்சி பிரீஸ் ரெசிடென்சியில் நடைபெற்ற நிகழ்வுக்கு இனிய நந்தவனம் கௌரவ ஆலோசகர் மேஜர் டோனர் கே.சீனிவாசன் தலைமை வகித்தார். ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஜெ.கார்த்திக் சிறப்புரையாற்றினார்.

இவர் பேசும்போது "நமது தாய்மொழியான தமிழ்மீது எப்போதும் பற்றுடன் இருக்க வேண்டும். வருகின்ற தலைமுறையினருக்கு தமிழில் பெயர் வைப்பதை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். வேற்று மொழிகளை கற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்தாலும் நமது தாய்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரி கூட்டங்களில் ஆங்கிலத்தில்தான் பேசுவார்கள். ஆனால், தற்போது தமிழ்மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்து எல்லாக் கூட்டங்களிலும் தமிழில் பேசி வருகிறோம். இதற்கு உறுப்பினர்கள் மத்தியில் நல்ல வரவேற்பும் இருந்து வருகிறது. தாய் மொழியில் பேசும்போது எளிதில் புரிந்து கொள்ள முடிவதால் அனைவரும் வரவேற்கிறார்கள். தமிழ்வழியில் படித்தவர்கள் நிறையபேர் சாதனையாளர்களாக இருக்கிறார்கள். தமிழர்களாகிய நாம் நமக்குள் உரையாடும் போதும் தமிழிலேயே பேச வேண்டும் என உறுதி எடுத்துக் கொள்வோம்" என்று வலியுறுத்தினார்.

தஞ்சாவூர் யோகம் ரியல் எஸ்டேட் நிறுவனம் இரா. செழியன், திருச்சி நவநீதா பில்டர்ஸ் நிறுவனர் பி. சுரேஷ் நவநீதா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பேராசிரியர் மீ . சந்திரசேகரன், ரோட்டரி மாவட்டச் செயலாளர் (நிகழ்ச்சி) எஸ்.கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஓ. சுந்தரமூர்த்தி (திருப்பூர்), நன்னிலம் இளங்கோவன், கௌதமன் நீல்ராஜ் (பெரம்பலூர்), கவி. செங்குட்டுவன் (ஊத்தங்கரை), முனைவர் கே.பத்மினி பாலா (தேனி), கவிஞர் பா. ஸ்ரீராம் (திருச்சி), கவிஞர். த.மு. சரவணன் (உதகை), க.கஜேந்திரன் (சென்னை), சுரேஷ் ஆறுமுகம் ( துறையூர்), டேவிட் சத்தியநாதன் (திருவாரூர்), மா பாலசுந்தரம் (மதுரை), கவி. வெண்ணிலவன் (மணமேல்குடி), துஷ்யந்த் சரவணன் (தேவகோட்டை), யா. சாம்ராஜ் ( சிவகங்கை), கவிஞர் மு.கோமதி (திருச்சந்தூர்), நொச்சியம் ச. சண்முகநாதன் (திருச்சி) ஆகியோருக்கு தமிழ் மாமணி விருது வழங்கப்பட்டது.

முன்னதாக நந்தவனம் அறக்கட்டளைத் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்க, இனிய நந்தவனம் மக்கள் தொடர்பாளர் பா.தனபால் அனைவருக்கும் நன்றி கூறினார்.





# பாகிஸ்தானில் 150 ஆண்டுகள் வரை வாழும் ஹன்சா பள்ளத்தாக்கு மக்கள்

இன்றைய காலகட்டத்திலும் பாகிஸ்தானின் ஹன்சா பகுதியில் வாழும் மக்கள் ஆரோக்கியமாக 150 வயது வரை வாழ்கிறார்கள் என்ற செய்தி ஆச்சரியத்தையும் பல கேள்விகளையும் எழுப்புகிறது. வாழ்க்கையை அனுபவிக்க ஒருவர் எவ்வளவு ஆரோக்கியமாக இருக்கிறார் என்பது முக்கியமானது.

நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டுமென்ற ஆசை அனைவருக்கும் இருந்தாலும், மாறிவிட்ட இன்றைய காலச்சூழலில், இளம் வயதிலேயே நீரிழிவு வியாதி, இரத்த அழுத்தம் போன்ற நாட்பட்ட நோய்கள் வருவது அதிகரித்து, ஆயுளைக் குறைக்கின்றன.

ஆனால் பாகிஸ்தானின் ஹன்சா பள்ளத்தாக்கில் வாழும் மக்கள் 150 ஆண்டுகள் வரை வாழ்கிறார்கள். அவர்களின் நீண்ட ஆயுளின் இரகசியம் என்னவென்று தெரிந்து கொள்ள பலரும் ஆவலுடன் இருக்கின்றனர்.

பாகிஸ்தானின் ஹன்சா பள்ளத்தாக்கில் வசிக்கும் ஹன்சா சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 100 முதல் 150 ஆண்டுகள் வரை வாழ்கின்றனர். இந்தப் பள்ளத்தாக்கில் வசிப்பவர்கள் 70 வயது வரை இளமையாக இருக்கின்றனர். பெண்கள் 65 வயதிலும் குழந்தைகளைப் பெற்றெடுக்க முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.





இவர்களின் நீண்ட ஆயுளின் இரகசியம் என்னவென்று தெரிந்து கொள்வதற்கு முன்னர், உலகின் பிற பகுதிகளில் வாழபவர்களின் ஆயுள் குறைவாக இருப்பதற்கு காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இங்குள்ள மக்கள் பனிப்பாறையில் இருந்து உருகிவரும் தண்ணீரைக் குடிக்கின்றனர். அதுமட்டுமல்ல, ஆண்டில் 2 முதல் 3 மாதங்கள் வரை உணவு உண்பதில்லை. இந்த உண்ணாவிரத காலத்தில், நீராகரம் மட்டுமே பருகுவார்கள்.

ஹன்ஸா சமூகத்தினரின் வாழ்க்கை முறை அதிக தொலைவு நடப்பது, பழங்கள், பச்சைக் காய்கறிகள், உலர் பழங்கள், பால் மற்றும் முட்டைகளை உள்ளடக்கிய உணவு உண்பதாகும். வாழ்க்கை மற்றும் உணவு முறையே அவர்கள் 70 வயதிலும் இளமையுடன் இருப்பதற்கும், 150 வயது வரை வாழ்வதற்கும் காரணமாகும்.

# ஈழத்து சிறுவர் இலக்கியத்தில் அழியாத்தடம் பதித்த கவிஞர் அம்பியின் குழந்தை பாடல்கள்

ஈழத்து சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் கவிஞர் அம்பியின் காத்திரமான படைப்புகள் வரலாற்றில் நிலைத்திருக்கும். கவிஞர் அம்பியின் 95 ஆவது பிறந்த நாள் பெப்ரவரி 17 இல் கொண்டாடப்பட்டது.

சிறுவர் இலக்கியப் படைப்புகளை தாயகத்தில் மாத்திரமின்றி புலம்பெயர் மண்ணிலும் படைத்த இலங்கையைச் சேர்ந்த 'அம்பி' என அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகர் அவர்கள் சிறுவர் இலக்கிய வரலாற்றில் காத்திரமான பங்களிப்பினை ஆற்றியுள்ளார்.

'குழந்தைக் கவிஞன்' என்றும் 'ஈழத்தின் தேசிகவிநாயகம்பிள்ளை' என்றும் போற்றப்படும் கவிஞர் அம்பி ஆக்கிய பாடல்கள் குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. தமிழ் மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி பெப்ரவரி 17 இல் தனது 94 ஆவது அகவையினுள் தடம்பதித்தார்.


இராமலிங்கம் அம்பிகைபாகர் என்ற இயற்பெயரைக் கொண்ட கவிஞர் அம்பியின் சொந்த ஊர் இலங்கையில் வடக்கேயுள்ள நாவற்குழி. தனது ஆரம்பக்கல்வியை நாவற்குழி சி.எம்.எஸ் பாடசாலையிலும் பின்னர் உயர்கல்வியை யாழ். பரி. யோவான் கல்லூரியிலும் தொடர்ந்த அவர் அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக இலங்கையில் பல பாகங்களிலும் பணியாற்றி உள்ளார்.

ஈழத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவரான கவிஞர் அம்பி அவுஸ்திரேலியாவில் தன் முதுமையிலும் தமிழுக்கு ஆற்றிய பணியை எவரும் மறவர். அம்பி அவர்கள் ஆஸ்திரேலிய தமிழ் சமூகத்திற்கு செய்த பங்களிப்பு மிகப் பெரிது. தாயகத்திலும், புலம்பெயர் மண்ணிலும் அவர் பெற்ற விருதுகளும், பாராட்டுகளும் ஏராளம்.

இளமையில் கொழும்பு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் தமிழ் பாடநூல் ஆசிரியராகவும் பணியாற்றிய அம்பி, 1981 இல் பாப்புவா நியூகினி நாட்டிற்கு பணிநிமித்தம் சென்று அதன் பின்னர் 1992இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார்.

கவிஞர் அம்பி 1950 ஆம் ஆண்டு முதல் எழுதி வருபவர். கவிதை, கவிதை நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு முதலான துறைகளில் அறியப்பட்டவர். அவுஸ்திரேலியாவின் சிட்னியில் தற்போது வசிக்கும் கவிஞர் அம்பி சிறுவர் இலக்கியத்திற்கு குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் தமிழ்ச் சிறார்களுக்காக கவிதைகள் பலவற்றையும் படைத்துள்ளார்.



கவிஞர் அம்பி

'இலட்சியக் கோடி' என்ற சிறுகதையின் மூலம் தமிழ் எழுத்துலகில் அறிமுகமானவர். இச்சிறுகதை தினகரன் இதழில் வெளிவந்தது. அத்துடன் தமிழ்நாட்டில் அண்ணாதுரை முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற பெருமைக்கு உரியவர். சிறுவர் இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றிய அம்பியை ஈழத்தின் தேசிகவிநாயகம் பிள்ளையாக சுபமங்களா இதழால் வர்ணிக்கப்பட்டவர்.

சிறுவர் இலக்கிய தமிழ்மொழி வளர்ப்பு, கவிதை என்று பல தளங்களில் சாதனைகள் செய்த கவிஞர் அம்பி அவர்கள் 1968இல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு தங்கப்பதக்க விருதையும் பெற்றுள்ளார். அதன்பின் 1993இல் இலங்கை இந்து கலாசார அமைச்சின் 'தமிழ்மணி விருது'ம், 1994இல் கொஞ்சும் தமிழ் சிறுவர் இலக்கிய நூலுக்கு இலங்கை சாகித்திய விருதும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அவர் அவுஸ்திரேலியாவில் மெல்பன் 'நம்மவர்' விருதையும், 1998இல் கனடாவில் சி.வை. தாமோதரம்பிள்ளை தங்கப் பதக்க விருதையும் பெற்றுள்ளார். அதன் பின்னர் 2004இல் அவுஸ்திரேலியா கன்பராவில் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் விருதையும் பெற்றுள்ளார்.

கவிஞர் அம்பி சிறுவர்களுக்காக எழுதிய இந்த இலக்கியத்தின் கதாநாயகர்களாக, பிள்ளைகள் விரும்புகின்ற பிராணிகளும் விலங்குகளும் அதிகமாக வந்து போவார்கள். குழந்தைகள் கற்பனாசக்தி மிக்கவர்கள். எனவே இக்கதைகளில் மிருகங்கள் பேசும், பறவைகள் பாடும். வண்ண வண்ண நிறங்களிலும் அழகான கண்ணைக் கவரும் படங்களுடனும் கவர்ச்சியாக சிறுவர்களைக் கவரும் வகையில் இந்த இலக்கியத்தைப் படைத்துள்ளார். சிறுவர் இலக்கியத்திற்கு அம்பியின் படைப்பாற்றலை கௌரவித்து ஈழத்தில் மல்லிகை, ஞானம் ஆகிய இலக்கிய இதழ்கள் முகப்பில் அம்பியின் உருவப்படத்துடன் அவரது பணியை பாராட்டி கட்டுரை எழுதி அலங்கரித்துள்ளன.

எளிமையும் தமிழின் அழகும் ஒருங்கே கூடியமையும் அவர் பாடல்கள் பல குழந்தைகளின் நாவில் இன்றும் தவழ்கின்றன. அம்பியின் கவிதைகள் நூலிலும் பல இதழ்கள், இணையத்தளங்களிலும் வெளியாகி பிரசித்தி பெற்றுள்ளன. அக்கவிதைகளுல் தமிழ் உணர்வை ஊட்டும் வரிகளை நாம் காணலாம். கவிஞர் அம்பி அவர்கள் 94 ஆவது (பெப்ரவரி 17, 1929) அகவையில் தடம் பதித்தாலும், தமிழுக்கு ஆற்றும் பணியில் இளமையாகவே என்றும் மிளிர்கிறார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...

# எடிசன் திரை விருது: மனம் கவர்ந்த நடிகை யார்?




ஐஸ்வர்யா ராய்

கடந்த ஆண்டு வெளியீடு கண்ட தமிழ் திரைப்படங்களில் எடிசன் திரை விருது தேர்வுப் பட்டியலில் முன்னணி திரை நட்சத்திர நடிகைகளின் சிறந்த நடிகைக்கான வரிசையில் ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, சமந்தா, நயன்தாரா, கங்கனா ரனோட், ஐஸ்வர்யா ராஜேஷ், வரலட்சுமி சரத்குமார், கீர்த்தி சுரேஷ், மனம் கவர்ந்த நடிகை வரிசையில் தமன்னா நயன்தாரா திரிஷா ப்ரியா பவானி சங்கர் சமந்தா, ராஷ்மிகா மண்டனா, மடோனா செபாஸ்டின் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். கடந்த கால எடிசன் திரை விருதுகளில் வாக்கு வித்தியாசத்தில் நடிகர்களை விட, நடிகைகள் அதிக வாக்குகள் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் இவ்வாண்டும் உலகத் தமிழர்கள் நடிகர்களை விட நடிகைகளுக்கு அதிகமான இணைய வாக்குகளும் சமூக வலைதள வாக்குகளும் அதிகமாக செலுத்தி வருகின்றனர். மேலும், பல்வேறு நாடுகளில் இருந்து வட்ஸ் அப் மூலம் எங்கள் வாக்கு குறிப்பிட்ட நடிகையை பெயரில் வாக்கு செலுத்தி உள்ளேன் என குறுஞ் செய்தியும் அனுப்பி வருகின்றனர்.


த்ரிஷா




நயன்தாரா

இதன் மூலம் இவ்வாண்டு நடிகர்களை விட நடிகைகளுக்கு அதிகமான வாக்குகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என எடிசன் விருது குழு தலைவர் தெரிவித்தார். மேலும் பல்வேறு நாடுகளில் தினசரி நாளிதழ், பண்பலை, தொலைக் காட்சி மூலம் விளம்பரங்கள் வருவதாலும் இணைய வாக்குகள் அதிகமாக வருகின்றன.

மேலும் தமிழ் திரைத் துறையினரை அதிகமாக நேசிக்கும் வாக்களிக்கும் நாடுகளாக ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, வளைகுடா நாடுகள், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகள் உள்ளன.

இந்தியாவை விட அதிகமான வாக்குகளை www.edisonawards.in பெற்று வருகிறது.

தொடர்புக்கு +60166167708





# ஸ்மார்ட்போன் உற்பத்தியில் உச்சம் தொட போகிறது தமிழகம்!

இந்தியா ஸ்மார்ட்போன் உற்பத்தியில் உச்சத்துக்கு உயர்ந்து வரும் வேளையில், உலகின் முன்னணி பிராண்டுகள் அனைத்தும் இந்தியாவில் பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ கட்டாயம் விநியோகம் வைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளன. இந்தியாவில் ஸ்மார்ட்போன் உற்பத்தியிலும் தயாரிப்பிலும் அடித்தளம் அமைத்தது தமிழ்நாடு என்றால் மிகையில்லை.

குறிப்பாகப் பாக்ஸ்கான் வருகை மூலம் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஸ்மார்ட்போன் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் ஏற்றுமதிக்கும் வழிவகுத்தது. இதன் பின்பு தான் சீன பிராண்டுகளைத் தாண்டி சாம்சங், அப்பிள் போன்றவை இந்தியாவில் தனது உற்பத்தி தளத்தை உருவாக்கி இன்று வரையில் வேகமாக விரிவாக்கம் செய்து வருகின்றன.


இந்தச் சூழ்நிலையில் புதிய வரவாக அமெரிக்க நிறுவனமான கூகுள் இந்தியாவில் தனது பிக்சல் ஸ்மார்ட்போனை தயாரித்து அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ளது சுந்தர் பிச்சை தலைமையிலான கூகுள் நிர்வாகம். இந்தியாவில் கூகுள் ஏற்கனவே தனது குரோம்புக் மடிக்கணினிகளைத் தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் கூகுள் தனது விநியோகிஸ்தர்களுக்கு அடுத்தக் காலாண்டுக்குள் இந்தியாவில் பிக்சல் ஸ்மார்ட்போன் தயாரிக்கும் பணிகள் தொடங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டு உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமே பிக்சல் 8 போன்களை இந்தியாவில் தயாரிக்க உள்ளதாக அறிவித்திருந்த நிலையில், தற்போது அடுத்தக் காலாண்டுக்குள் உற்பத்தியை தொடங்க வேண்டும் என உத்தரவிட்டு உள்ளது. இந்தத் திட்டத்தில் இந்திய பிரதமர் அலுவலகம் மற்றும் ஐ.டி துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்னவா ஆகியோருக்கு நன்றி எனச் சுந்தர் பிச்சை 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி அறிவித்திருந்தார். அப்பிள் போல் கூகுள் நிறுவனமும் தனது உற்பத்தி விநியோகச் சங்கிலியை செயினைச் சீனாவில் இருந்து இந்தியாவுக்கு மாற்றி வருகிறது. கூகுள் நிறுவனத்தின் சப்ளையர்கள் வரும் வாரங்களில் அதன் உயர்தர மாடலான பிக்சல் 8 ப்ரோ ஸ்மார்ட்போன்களுக்கான தயாரிப்புத் தளத்தை நிறுவி, ஏப்ரல்ஜுன் காலாண்டில் அதன் உற்பத்தி செய்யத் தொடங்கும் என்று தெரிகிறது.

# கொஸ்கமவில் மனத்தூய்மைக்கான தியானப்பயிற்சி மார்ச் 10 இல் ஆரம்பம்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின் அவர்களிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்று தந்த ச. கோயங்கா அவர்களால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறை பற்றிய அறிமுகம் இலங்கையில் நடைபெறவுள்ளது.



குருஜி எஸ். என். கோயங்கா அவர்களின் வழிகாட்டலில் கொஸ்கம, பஹலா கொஸ்கம, தம்மசோபா விபாசனா தியான மையத்தில் மார்ச் 10ம் திகதி முதல் 21ம் திகதி வரை பத்து நாட்கள் தியான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இவர்களது இலவச பயிற்சிநெறியில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம். விபாசனா தியான மையத்தில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் 0772448608, 0773504491, 0774935850 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், www.sobha.dhamma.org என்ற இணையத்தில் முன்பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

மனத்தூய்மைக்கான இந்த தியானப் பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

எச்.எச்.விக்கிரமசிங்க...
ச.கோயங்கா...

# லடாக் எல்லையில் 21 ஆவது தடவையாக இடம்பெற்ற சமரசப் பேச்சுவார்த்தை!



## இந்திய–சீன இராணுவ உயரதிகாரிகள் நேரில் சந்திப்பு!

இந்தியா_ சீனாவின் எல்லைப் பகுதியான கிழக்கு லடாக்கில் அமைதியை உறுதி செய்ய இரு நாடுகளும் முயன்று வருகின்றன. இது தொடர்பாக கடந்த வாரம் இரு நாடுகளின் இராணுவ உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் திகதி கிழக்கு லடாக்கின் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் ஏற்பட்ட மோதல் காரணமாக இரு நாட்டு எல்லைப் பகுதியிலும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இந்த மோதலில் இந்திய இராணுவ தரப்பில் 20 வீரர்களும், சீனா தரப்பில் 45 வீரர்களும் உயிரிழந்ததாக இராணுவத் தகவல்கள் தெரிவித்தன.

இதனையடுத்து பதற்றத்தைத் தணிக்க இரு தரப்பிலும் இராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், லடாக் முதல் அருணாச்சலப் பிரதேசம் வரையிலான 3,488 கி.மீ உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு (LAC) முழுவதும் பதுங்கு குழிகள், ஏவுகணை நிலைகள், வீதிகள் மற்றும் பாலங்கள் போன்ற புதிய இராணுவ உள்கட்டமைப்பை சீனா தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. ஏற்கெனவே எல்லையில் பதற்றம் நீடித்து வரும் நிலையில், சீனாவின் நடவடிக்கை இந்தியாவை சீற்றமூட்டியது. இராணுவ உயரதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

பேச்சுவார்த்தை இவ்வாறே நீடித்து வந்த நிலையில் 12 மற்றும் 16 ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் இரு நாடுகளும் ஓரளவு ஒத்த கருத்துக்களை முன்வைத்தன. அதாவது, 12 ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் இருதரப்புப் படைகளும் கோக்ரா, ஹாட் ஸ்பிரிங் பகுதியிலிருந்து பின்வாங்கப்படுவதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன்படி படைகள் பின்வாங்கப்பட்டன.

13 இலிருந்து 15 ஆம் கட்டப் பேச்சுவார்த்தை வரையில், ஹாட் ஸ்பிரிங் பகுதியிலிருக்கும் மீதமுள்ள படைகளையும் பின்வாங்குவதுதான் பதற்றத்தை நிலையாக தவிர்க்கும் என்று இந்தியா தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால் சீனா அந்த யோசனைக்கு ஒத்துழைக்காததால், இதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இறுதியாக 16 ஆவது கட்டப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரிடையே சுமுகமான முடிவு எட்டப்பட்டதாக இந்தியாவும் சீனாவும் கூட்டறிக்கையில் தெரிவித்தன. இருப்பினும் இரு நாடுகளுக்கும் இடையே உள்ள பதற்றத்தைத் தணிக்க மேலும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் உண்மை.

இதற்காக கடந்த 19 ஆம் திகதி 21ஆவது சுற்று இராணுவ உயரதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தை சுஷுல்மோல்டோ எல்லை சந்திப்புப் புள்ளியில் நடைபெற்றது. இதில் உண்மையான கட்டுப்பாட்டு கோடு (LAC) பகுதியில் நிரந்தர அமைதிக்கான வழிமுறைகள் குறித்து இரு நாடுகளும் தங்கள் யோசனைகளை முன்வைத்துள்ளன. ஆனால் இதில் எந்த இறுதி முடிவும் எட்டப்படவில்லை. எனவே 22 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்கும் என்று இராணுவத்துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதுஇவ்விதமிருக்க கிழக்கு லடாக்கில் உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு அமைந்துள்ள எல்லைப் பகுதியில் நிலைமை சீராக இல்லை என்றும், அங்கு பதற்றம் நீடிப்பதாகவும் வடக்கு இராணுவ படைப்பிரிவுத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீநகர் வந்திருந்த வடக்கு இராணுவ படைப்பிரிவு தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் உபேந்திரா திவேதி இதனைத் தெரிவித்தார்.

"கிழக்கு லடாக்கின் வடக்கு எல்லைப் பகுதியின் நிலைமை ஸ்திரமாக இருப்பதாகத் தோன்றினாலும், நிலைமை சீராக இல்லை.அங்கு ஒருவித பதற்றம் நிலவுகிறது" என்று அவர் தெரிவித்தார்.

"பூஞ்ச்ரஜோரி பிராந்தியத்தில் நடந்து வரும் வளர்ச்சிப் பணிகள் பிடிக்காததால் அண்டை நாடு தீவிரவாத தாக்குதல்களை நடத்தி வருகிறது" என்று பாகிஸ்தானை குறிப்பிட்டு அவர் பேசினார்.

லடாக் (Ladakh) என்பது ஒன்றியப் பகுதியாக இந்தியாவால் நிர்வகிக்கப்படும் ஒரு பிராந்தியமாகும். இது அகன்ற காஷ்மீர் பிராந்தியத்தின் ஒரு பகுதியாகும். மேலும் 1947 முதல் இந்தியா, பாகிஸ்தான், சீனா இடையே சர்ச்சைக்கு ஆளான பகுதியாகும்.

லடாக்கின் கிழக்கே திபெத் தன்னாட்சிப் பகுதி, தெற்கே இந்திய மாநிலமான இமாச்சலப் பிரதேசம் மற்றும் இந்திய ஒன்றிய ஆட்சிப் பகுதியான ஜம்மு காஷ்மீர், மேற்கில் பாகிஸ்தானால் நிர்வகிக்கப்படும் வடக்கு நிலங்கள், வடக்கே காரகோரம் கணவாய்க்கு குறுக்கே சிஞ்சியாங் தென்மேற்கு மூலை போன்றவை எல்லைகளாக உள்ளன.

இது வடக்கே காரகோரம் மலைத்தொடரில் உள்ள சியாச்சின் பனியாறிலிருந்து தெற்கே பிரதான பெரிய இமயமலை வரை நீண்டுள்ளது. மக்கள் வசிக்காத அக்சாய் சின் சமவெளிகளைக் கொண்ட கிழக்கு முனை, லடாக்கின் ஒரு பகுதியாக இந்திய அரசாங்கத்தால் உரிமை கோரப்பட்டு, 1962 முதல் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது.

கடந்த காலத்தில் லடாக் முக்கியமான வணிகப் பாதைகளின் நடுவில் முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது.ஆனால் 1960 களில் சீன அதிகாரிகள் திபெத் தன்னாட்சி பிராந்தியத்திற்கும் லடாக்கிற்கும் இடையிலான எல்லைகளை மூடியதால், சர்வதேச வர்த்தகம் குறைந்தது. 1974 முதல் இந்திய அரசு லடாக்கில் சுற்றுலாவை ஊக்குவித்து வருகிறது. லடாக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதால், இந்திய இராணுவம் இப்பகுதியில் வலுவாக காலூன்றி உள்ளது.

லடாக்கின் மிகப்பெரிய நகரம் லே ஆகும். அதற்கடுத்து பெரிய நகரம் கார்கில் ஆகும். இவை ஒவ்வொன்றும் ஒரு மாவட்டத்துக்கு தலைமையிடமாக உள்ளன.

லே மாவட்டத்தில் சிந்து, சியோக், நுப்ரா ஆற்றுப் பள்ளத்தாக்குகள் உள்ளன. கார்கில் மாவட்டத்தில் சுரு, திராஸ், ஜான்ஸ்கர் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் உள்ளன. ஆற்றுப் பள்ளத்தாக்குகள் மக்கள் தொகை கொண்ட பகுதிகளாக உள்ளன. மலைச்சரிவுகளில் மேய்ச்சல் தொழில் செய்யும் சாங்பா நாடோடிகள் வாழும் பகுதி உள்ளது. இப்பகுதியில் உள்ள முக்கிய மதங்களை எடுத்துக் கொண்டால் முஸ்லிம்கள் (முக்கியமாக சியா _46%), பௌத்தர்கள் (முக்கியமாக திபெத்திய பௌத்தர்கள்_40%), இந்துக்கள் (12%), பிறர் (2%) உள்ளனர்.

லடாக் இந்தியாவில் மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகும். இதன் கலாசாரம் மற்றும் வரலாறு திபெத்தின் கலாசாரத்துடன் நெருங்கிய தொடர்புடையது.

ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, 31 ஒக்டோபர் 2019 அன்று லடாக் இந்தியாவின் ஒன்றிய ஆட்சிப் பகுதியாக நிறுவப்பட்டது. அதற்கு முன்னர், இது ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. லடாக் இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் இரண்டாவது குறைந்த மக்கள் தொகை கொண்ட ஒன்றிய ஆட்சிப் பகுதி ஆகும்.

லடாக்கின் பல பகுதிகளில் காணப்படும் பாறைச் சிற்பங்கள் புதிய கற்காலத்திலிருந்து இப்பகுதியில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாக உள்ளன. லடாக்கின் ஆரம்பகால மக்கள் கம்பா என அழைக்கப்படும் நாடோடிகளாவர். குலுவைச் சேர்ந்த மோன்ஸ் மற்றும் கில்கித்தில் தோன்றிய பிரோக்பாஸ் ஆகியோரால் பின்னர் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன.

முதல் நூற்றாண்டில் லடாக் குசானப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. 2ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் இருந்து மேற்கு லடாக்கிற்கு பௌத்தம் பரவியது. 7 ஆம் நூற்றாண்டின் பௌத்த பயணியான சுவான்சாங் தனது குறிப்புகளில் இப்பகுதியை விபரித்துள்ளார்.

முதல் ஆயிரமாண்டின் பெரும்பகுதியில், மேற்கு திபெத்தின் போன் பௌத்த சமயத்தை கடைப்பிடித்த சாங்சூங் இராச்சியங்கள் இப்பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. காஷ்மீர் மற்றும் சாங்சூங்கிற்கு இடையில் உள்ள லடாக் இந்த இரு சக்திகளில் ஒன்றின் கட்டுப்பாட்டில் இருந்ததாக நம்பப்படுகிறது.

எட்டாம் நூற்றாண்டில் கிழக்கிலிருந்து உருவான திபெத்திய விரிவாக்கத்திற்கும், மத்திய ஆசியாவிலிருந்து உருவான சீன ஆதிக்க முயற்சிக்கும் இடையேயான பிரச்சினையில் லடாக் சிக்கிக் கொண்டது.

இந்தியா எதிர்நோக்கி வருகின்ற எல்லைப் பிரச்சினையில் லடாக் பிரதேசம் பரபரப்பு நிறைந்ததாக இருந்து வருகின்றது. அப்பிரதேசத்தில் சீனா மற்றும் இந்தியப் படையினருக்கிடையிலான எல்லை மோதல்கள் அவ்வப்போது இடம்பெற்று வருகின்றன.

## நிரந்தர அமைதிக்கான அறிகுறி இல்லை; இருதரப்புப் படையினருக்கிடையில் அவ்வப்போது மோதல்கள்!



# சவூதி தூதுவருக்கு அம்ஜத் ராஸிக் வாழ்த்து



இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையில் இருதரப்பு இராஜதந்திர உறவை மென்மேலும் வலுப்படுத்துவதில் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி தன்னை மிகவும் அர்ப்பணித்துள்ளதாக, கலாநிதி அம்ஜத் ராஸிக் தெரிவித்துள்ளார்.

சுமார் 5 தசாப்தத்துக்கும் மேலாக சவூதிக்கும் இலங்கைக்கும் இடையில் இருதரப்பு உறவு நிலைத்துள்ள நிலையில், 2 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவராக காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி நியமனம் பெற்றார். இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை பல கோணங்களிலும் மேம்படுத்த அவர் தன்னை அர்ப்பணித்துள்ளார். இலங்கையின் பொருளாதார உறவை பலப்படுத்தும் பல முன்னெடுப்புகள் தூதுவரால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில் பெப்ரவரி 22ஆம் திகதி தனது ஸ்தாபகத் தினத்தை அனுஷ்டித்த சவூதி அரேபியாவை வாழ்த்துவதுடன், இலங்கை சவூதி உறவை மேம்படுத்துவதில் அயராது சேவை புரியும் தூதுவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைவதாக, கலாநிதி அம்ஜத் ராஸிக் மேலும் தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருள் குற்றம்;...

நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார். இவ்வாறு சிறைச்சாலையில் உள்ளவர்களில் 65 சதவீதமானோர் போதைப்பொருள் பாவனை தொடர்பாக குற்றஞ்சாட்டு உடையவர்களெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தலைமையிலான...

தெரிவித்தார். ஹூதி கிளர்ச்சியாளர்கள் தொடர்பில் சவூதி அரேபியாவின் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவு தெரிவித்த ஜனாதிபதி, இந்துசமுத்திரத்தின் சுதந்திரமான கடல் பயணத்துக்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிக்கும் எனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் யூ.எல்.எம்.ஜோஹர், சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொழம்பகே, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அமெரிக்க பிரிவின் பணிப்பாளர் சதுர் பெரேரா ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இந்திய உயர்ஸ்தானிகர்...

வாழ்த்து தெரிவித்ததுடன், கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமெனவும் உயர்ஸ்தானிகர் கேட்டுக்கொண்டார்.

தமிழர் நலன்சார் விடயங்களில் இந்தியாவின் முறையான வகிபங்கை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் அவர்கள் இருவரும் கலந்துரையாடினர்.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் பிரதி உயர்ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டேயும் இச்சந்திப்பில் பங்குபற்றினார்.

# இன்றைய பலன்கள்

(24.02.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
சில நன்மைகள் நடைபெறும். எதிரிகள் விலகுவர். எடுத்த காரியத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும் .

**ரிஷபம் :**
பொருளாதார பற்றாக்குறை அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள். குடும்பத்தில் கடன் பிரச்சினை மீண்டும் தலை தூக்கலா.

**மிதுனம்:**
ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வருமானத்தில் சிறு சிறு தடைகள் வந்து சேரும். வாழ்க்கை தேவைகளை பூர்த்தி செய்ய கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம்.

**கடகம்:**
விரயத்திற்கு ஏற்ற தொகை வந்து சேரும். வீடு மாற்றமும் நன்மை தரும். எந்த ஒரு காரியத்தை செய்ய நினைத்தாலும் பணத்தை வைத்துக்கொண்டு செய்ய வேண்டியதில்லை.

**சிம்மம்:**
வருமானம் பற்றாக்குறை ஏற்படும். திட்டமிட்ட காரியங்களை செய்வதில் சில தடுமாற்றங்களை சந்திப்பீர்கள் .

**கன்னி:**
இந்த நேரத்தில் மிகுந்த கவனத்தோடு செயல்பட வேண்டும். தொழில் வளர்ச்சியில் குறுக்கீடுகள் ஏற்படலாம்.

**துலாம்:**
பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உண்டு. விரயங்கள் கூடுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:**
இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். கடந்த காலத்தில் பலமுறை முயற்சி செய்தும் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது திடீரென நடைபெற்று மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்த போகிறது.

**தனுசு:**
கல்யாணம் போன்ற சுப காரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும். கடை திறப்பு விழா, கட்டிட திறப்பு விழாக்கள் நடைபெறும்.

**மகரம்:**
கடன் சுமை குறையும். கவலைகள் தீரும். இடமாற்றம் இனிமை தரும். சாதாரண சிகிச்சையிலேயே நோய்கள் குணமாகும்.

**கும்பம்:**
பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வரலாம். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.

**மீனம்:**
ஆரோக்கிய தொல்லை அதிகரிக்கும். வெளிநாடு செல்லும் முயற்சியில் தாமதம் ஏற்படும். கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதில் தடைகள் உருவாகும்.

## கௌரவ நாமங்களை...

ஜனாதிபதியால் வழங்கப்படும் விருதுகள் மற்றும் கௌரவ நாமங்களுக்காக பயன்படுத்தப்படும் பெயர்களை பயன்படுத்தி, சில நபர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விருதுகள் மற்றும் பாராட்டு (சன்னஸ்) பத்திரங்கள், சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றமை ஜனாதிபதி அலுவலகத்துக்கு தெரியவந்துள்ளது.

அதனால் தேசிய விருதுகளுக்காக பயன்படுத்தப்படும் கௌரவ நாமங்களை வேறு தரப்பினர் தவறாக பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும், முறையற்ற விதத்தில் வழங்கப்படும் விருதுகள் காரணமாக இதுவரையில் இலங்கையில் கௌரவிப்புக்கு பாத்திரமானவர்களுக்கு செய்யும் அநீதியாகவும் அவமரியாதையாகவும் அமைவதாக ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அவ்வாறான செற்பாடுகளுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

1986ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதியால் 387/3 மற்றும் 1986.02.03 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் தேசிய விருகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னர் 627/8 மற்றும் 19900912 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரம், 863/4 மற்றும் 19950320 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரம், 1535/12 மற்றும் 20080208 திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் ஊடாக தேசிய விருது வழங்கும் செயன்முறைகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 1802 2023 ஆம் திகதி சமர்பிக்கப்பட்ட PS/NC/ACD/95/2023 இலக்க அமைச்சரவைக் குறிப்பு மூலம், "விசிஷ்ட கௌசல்யாபிமானி" மற்றும் "விசிஷ்ட ஜனரஜ அபிமானி" ஆகிய இரண்டு புதிய விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

மாகாண ஆளுநர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் ஊடாக தேசிய விருதுகளுக்கான பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்படுவதோடு, ஜனாதிபதியினால் பிரதமரின் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இலங்கைக்காக சிறந்த சேவை ஆற்றிய இலங்கையர்கள் மற்றும் இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகளை வழங்குவதற்கான தெரிவுக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தேசிய விருதுகளை பெற விரும்பும் தகுதியுள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கான புதிய முறைமை ஒன்றை தயாரிப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்களை கொண்ட தேர்வுக் குழுவால் விருது பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட விருது பெற்றவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, குறிப்பிட்ட திகதியில் ஜனாதிபதி தலைமையில் விருதுகள் வழங்கப்படும்.

சுதந்திர தினம், நினைவு தினம் தேசிய வீரர்கள் தினம் உட்பட விருதுகள் வழங்கப்படுவதற்கு பொருத்தமான திகதிகளை ஜனாதிபதிக்கு தீர்மானிக்க முடியும். மேலும், இலங்கையர் அல்லாதவர்களுக்கு தேசிய விருதுகள் வழங்கப்படும்.

## அமெரிக்க பிரதி இராஜாங்க...

பேச்சு நடத்தினார். இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் விரிவான கலந்துரையாடல்களில் இருவரும் ஈடுபட்டனர். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார சவால்களை சமாளிப்பதற்காக அமெரிக்கா வழங்கிய மனிதாபிமான மற்றும் அவசரகால உதவிகளைப் பாராட்டிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் சப்ரி, அண்மையில் கொழும்பு மேற்கு சர்வதேச முனைய தனியார் நிறுவனத்துக்கு அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வழங்கிய 553 மில்லியன் அமெரிக்க டொலர் அபிவிருத்தி உதவியை வரவேற்றார். சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியைப் பாதுகாப்பதில் அமெரிக்காவின் உதவியையும் அவர் பாராட்டினார்.

இந்துசமுத்திர விளிம்பு சங்கத்தின் தலைவராக இலங்கையின் முன்னுரிமைகள் மற்றும் அனைவரும் வரி செலுத்துவதற்கான சுதந்திரத்தை மேம்படுத்தி, வர்த்தகம் மற்றும் வணிகத்தை எளிதாக்குவதற்காக பசுமைப் பொருளாதாரம் மற்றும் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பில் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, பிரதி இராஜாங்க செயலாளர் வர்மாவிடம் விளக்கினார்.

ஆட்சி, ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மேலும் வலுப்படுத்துவதற்கும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்குமான அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்தும் அவர், பிரதி இராஜாங்க செயலாளருக்கு எடுத்துரைத்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆக்கபூர்வமான முன்னேற்றத்தை சுட்டிக்காட்டிய பிரதி இராஜாங்க செயலாளர் வர்மா, பொருளாதார செழிப்பை நோக்கி நாட்டுக்கு தொடர்ச்சியான அமெரிக்க உதவிகளை வழங்குவதாக உறுதியளித்தார்.

பிரதி இராஜாங்க செயலாளருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்புச் சபை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பதில் செயலாளர் மொஹமட் ஜௌஹர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகளும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருடன் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## சுற்றுலாத் தலங்களை...

அவர் குறிப்பிட்டார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (22) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இரவுப் பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும், உலகின் பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இரவுநேர பொருளாதாரம் முக்கிய பங்காற்றுவதாகவும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் டயனா கமகே,

"ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இரவு நேரங்களில் பல்வேறு பொழுதுபோக்கு நடவடிக்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கான பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் இரவில் உணவகங்களை திறந்து வைப்பது உள்ளிட்ட இரவுநேர பொருளாதாரத்தை நாடுவதன் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணியை சுமார் 70 சதவீதம்வரை அதிகரிக்க முடியும். உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சிக்கு இரவுநேர பொருளாதாரத்தின் பங்களிப்பை பயன்படுத்துகின்றன.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, நம் நாட்டு மக்களும் இரவு நேரங்களில் உணவகங்களுக்கு செல்வது உள்ளிட்ட பல்வேறு கேளிக்கைகளில் ஈடுபடுவதையே விரும்புவது வழக்கம். இதன் மூலம் விசேடமாக மதுவரி வருமானத்தையும் அதிகரிக்க அரசாங்கத்துக்கு வாய்ப்பு கிடைக்கிறது. ஒரு நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கும் நாட்டின் நிலையான வளர்ச்சியை பேணுவதற்கும் அரச வருமானத்தை அதிகரிப்பது அவசியம்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்கள் இந்த நாட்டுக்கு வந்து பொழுதுபோக்கக்கூடிய வகையில் தற்போதுள்ள சில கட்டுப்பாடுகள் திருத்தப்பட வேண்டும். உதாரணமாக, உணவகங்கள் திறக்கும் நேரத்தை மாற்ற வேண்டும். சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியான ஒரு நெகிழ்வான கொள்கைக்கு நாம் செல்ல வேண்டும்.

இரவுநேர பொருளாதாரம் தொடர்பில் சில தரப்பினர் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். ஆனால் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொழுதுபோக்கிற்கான வாய்ப்புகள் இருக்க வேண்டும். குறிப்பாக கடலோரப் பகுதிகளிலும், கொழும்பு போன்ற நகர்ப்புறப் பகுதிகளிலும் முக்கிய சுற்றுலாத் தலங்கள் உள்ளன. எனவே, இதுபோன்ற இடங்கள் தொடர்பான சட்ட, விதிமுறைகளை திருத்தம் செய்து, தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் " என்றார்.

## விவாதத்தை ஒத்திவைத்துவிட்டு...

அடையாளத்தை ஏற்றுக்கொள்வது பொருத்தமானதாக எண்ணுவதுடன், அடுத்த 10 வருடங்களின் பின்னர் நடைபெறும் சனத்தொகை கணக்கெடுப்பின் போது காலம் ஓர் அடையாளத்தைக் காட்டுமெனவும், தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

'தமிழர்' என்ற பொது தமிழ் இன அடையாளமாக இருக்கலாம். அல்லது இன அடையாளமே மறைந்து 'இலங்கையர்' என்ற பொது நாட்டு அடையாளமாகவும் இருக்கலாமெனவும், அவர் கூறினார். சனத்தொகை கணக்கெடுப்பு தொடர்பாக மனோ கணேசன் எம்.பியை அவரது இல்லத்தில் மலையகத் தமிழ் அடையாளத்துக்கான கூட்டிணைவு அமைப்பினர் நேற்று சந்தித்து கலந்துரையாடியதுடன், தமது கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தையும் கையளித்தனர். இச்சந்திப்பு தொடர்பாக மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்த போது,

"மலையக சிவில் அமைப்பினருடன் கலந்துரையாடல் நடைபெற்றதுடன், சிவில் சமூக நண்பர்களின் முன்னெடுப்பு சமநிலைப்பாட்டை அடைந்தமைக்கு எனது மகிழ்ச்சியை தெரிவித்தேன். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் மற்றும் அனைத்து தமிழ் பேசும் மக்கள், இலங்கை மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த முடியாது. இது இலங்கை நாட்டவர் என்ற அடையாளத்துக்கு உள்ளே வரும் ஒரு சட்டபூர்வமான உள்ளக அடையாளமென்பதை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இது தொடர்பாக முற்போக்கு நிலைப்பாட்டை கணக்கில் எடுத்து, உத்தேச கணக்கெடுப்பு ஆவணங்களில் உரிய அடையாளம் இடம்பெறுவதற்கான உரிய அறிவுறுத்தல்கள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கிடைக்க வேண்டுமென்று என்னுடன் தொலைபேசியில் உரையாடிய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தொலைபேசியில் தொடர்புகொண்டு எமது நிலைபாட்டை தெரிவித்தேன். இதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துக்கு வழங்குவதாக அவர் உறுதியளித்தார்.

இதை ஒருங்கிணைத்து மேல் நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடமும் தொலைபேசியில் தொடர்புகொண்டு கூறினேன்" என்றார்.

## பண்டிகைக் காலத்துக்காக...

6 கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய அண்மையில் அனுமதி வழங்கப்பட்டதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் பண்டிகைக் காலம்வரை 9 கோடி முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய இலங்கை கூட்டுப்பணிக்குழு...

10 படகுகளை தமிழ்நாட்டுக்கு கொண்டு வருவதற்காக அமைக்கப்பட்ட மீட்புக் குழுவினர் இலங்கை செல்ல அனுமதி வழங்க வேண்டுமென மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் போது தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டி, மத்திய பிரதமர் மற்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோரை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இவ்வாறான கைது சம்பவங்களில் மத்திய அரசு தலையிட்டு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக விடுதலை செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன்......

அன்று மாலை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறுமென, தேவஸ்தான அறங்காவலர் சபை தலைவர் தெரிவித்தார். தேர்த் திருவிழாவையிட்டு மாத்தளை நகரம் விழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

## அமெரிக்காவின் முதல்...

வணிக விண்கலம் என்ற பெருமையையும் பெற்றுள்ளது. 50 ஆண்டுகளுக்கு பிறகு நிலவில் அமெரிக்காவை சேர்ந்த விண்கலம் ஒன்று தரையிறக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் நோக்கத்தில் இந்த விண்வெளி ஆய்வு நிறுவனம் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

## பொதுச் சபைக் கூட்டத்தில்....

கலந்து கொண்டுள்ள போதும், தமிழ் பேசும் பிரதிநிதியாக இவர் மட்டுமே பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## சிலரின் வெளிப்பாடுகள்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒருவர் உயிருடன் வாழும்போது அவரைப் பற்றி நாம் பெரிதாக பேசாவிட்டாலும், அவர் எம் மத்தியில் இல்லாத போது அவர் தொடர்பில் அவர் செய்த நல்லவைகளை நாம் பாராட்டுவது முக்கியமாகும்.

அந்த வகையில் சனத் நிஷாந்த புதிய சிந்தனைகளைக் கொண்டவர். தனது அனைத்து செயற்பாடுகளையும் முகாமைத்துவம் செய்து சிறப்பாக முன்னெடுத்தவர். அவரது கருத்துக்கு இணங்க செயற்பட்டவர். அந்த வகையில் அவரது செயற்பாடுகளை நாம் மதிக்க வேண்டும்" என்றார்.

## எட்டு மாவட்டங்களில்... (03ஆம் பக்கத் தொடர்)

அதிகளவு நீரை அருந்துதல், அதிக சோர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடாதிருத்தல், வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடைகளை அணிதல், நிழலான இடங்களில் இருத்தல் ஆகிய நடைமுறைகளை பின்பற்றுமாறும் பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டார்.

உஷ்ணமான காலநிலை காரணமாக உடலிலிருந்து அதிகளவான வியர்வை வெளியேறுவதால் களைப்பு ஏற்படலாம். இதைத் தவிர்க்க நீர், இளநீர், கஞ்சி போன்ற நீராகாரத்தை எடுக்குமாறு, கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

மேலும், உஷ்ணம் காரணமாக தோல் சார்ந்த பிரச்சினை ஏற்படலாம். எனவே சிறுவர்களை காலை, மாலையில் நீரில் குளிர்ப்பாட்ட வேண்டுமெனவும், அவ்வைத்திய நிபுணர் மேலும் தெரிவித்தார்.

## 5½ மாதக் குழந்தையை...

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர். மட்டக்களப்பு வாகரையை வசிப்பிடமாக கொண்டதாகக் கூறப்படும் இவ்விருவரும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தோட்டத்தில் உள்ள குடியிருப்பு அறையில் தற்காலிகமாக குடியேறினர். இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த மூதாட்டி உண்மையில் இவர்களது உறவினரா? என்ற சந்தேகம் நிலவுவதாகவும், அவர் மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளமையாலேயே சந்தேகம் நிலவுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மூதாட்டிக்கு மனநலம் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்துதான், குழந்தையை அங்கேயே விட்டு, வெளிநாடு செல்லும் நோக்கில் தற்காலிகமாக வீட்டுக்கு இவர்கள் வந்திருக்கலாமென்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தோட்ட நிர்வாகத்திடம் இளம் தம்பதியினர் வழங்கிய தகவலின்படி அவர்கள் இருவரும் 21 வயதுடையவர்கள். இவர்கள் இருவரும் கடந்த 22ஆம் திகதி அதே குடியிருப்பில் வசிக்கும் ஒருவரை தொடர்புகொண்டு, தாம் வெளிநாடு செல்வதாகவும், அறையில் இருக்கும் குழந்தையை யாராவது பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக தோட்ட நிர்வாகத்திடம் தெரிவித்த பின்னர் தோட்டத்தின் குடும்ப நலப் பணியாளரால் குழந்தை தெல்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. பாலூட்டும் வசதிகள் வைத்தியசாலையில் இல்லாத காரணத்தினால் குழந்தை பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக கலஹா தெல்தோட்டை வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி கபில அத்தபத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் மற்றும் கண்டி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசேட விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு மேல் குழந்தையின் தாயும் தந்தைக்கும் தொலைபேசி அழைப்பு எடுத்த போதும் தொலைபேசி செயலிழக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்கள் உண்மையில் வெளிநாடு சென்றுள்ளனரா? அல்லது வெளிநாடு செல்வதாகக் கூறி நாட்டுக்குள்ளேயே தலைமறைவாகியுள்ளனரா? என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## தோட்டத் தொழிலாளரின்...

தலைமையகமான சௌமியபவனில் நேற்று நடத்தினார். கடந்த பல தசாப்தங்களாகவிருந்து மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளம் காரணமாக பல்வேறு பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அம்மக்களின் நலன் கருதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸினூடாக அவர்களது சம்பள அதிகரிப்பு தொடர்பான முன்னெடுப்புகளை தலைவர் செந்தில் தொண்டமான் தற்போது எடுத்து வருகின்றார்.

இச்சம்பள அதிகரிப்பு, அவர்களுக்கு கிடைக்குமானால் அவர்களது பொருளாதாரப் பிரச்சினைகள் ஓரளவு குறைய வாய்ப்புள்ளது. நாட்டில் தற்போதைய விலைவாசி அதிகரிப்பு, அம்மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை எம்மால் அறிய முடிகிறது. அந்த வகையில் அவர்களின் சம்பள அதிகரிப்பு முக்கியமான ஒன்றாகுமெனவும் இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான தெரிவித்தார்.

## மணல் அகழ்வதாகக் கூறி...

கைது செய்துள்ளதுடன், இவர்களிடமிருந்து வைகோ இயந்திரம் மற்றும் டிப்பார் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். புதுமாத்தளனிலுள்ள வீட்டுக் காணியொன்றில் புதையல் தோண்டுவதாக கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், இச்சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

புதுமாத்தளனைச் சேர்ந்த இருவரும், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஒருவரும், கைவேலியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கிழக்கின் குரல்



## ஊருக்குள் புகுந்த முதலை




(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட திருக்கோவில் 03 பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (22) இரவு ஊருக்குள் புகுந்த முதலையொன்றை பிரதேசவாசிகள் மடக்கி பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.ஊருக்குள் புகுந்த முதலை தொடர்பில் பொலிஸாருக்கும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் பொதுமக்கள் அறிவித்தனர்.

குறித்த இடத்திற்கு விரைந்த வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் உதவியுடன் முதலையை பிடித்து பாதுகாப்பான முறையில் அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

இதேநேரம் இவ்வாறன சம்பவங்கள் திருக்கோவில் பிரதேசத்தில் பல பகுதிகளில் இடம்பெற்று வருவதாக மக்கள் கூறுகின்றனர்.

அருகில் குளக்கரைகள் உள்ளமையினால் அங்கிருக்கும் முதலைகள் ஊரை நோக்கி வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு சரியான நடவடிக்கை மேற்கொண்டு தீர்வை பெற்றுத்தருமாறு பிரதேசமக்கள் தெரிவித்தனர்.

## வாகன விபத்தில் பெண் மரணம்

(கிண்ணியா மத்திய நிருபர்)



கொழும்பிலிருந்து கிண்ணியா நோக்கி பயணித்த வான் ஒன்றும் திருகோணமலையிலிருந்து தென் பகுதியை நோக்கி சென்றுக் கொண்டிருந்த மணல் ஏற்றிய டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் எழுவர் படுகாயங்களுக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மாலை கந்தளாய் ஹபரண வீதி, அலுத்ஓயா என்ற இடத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில், கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 42 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கந்தளாய் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, விபத்தில் காயமடைந்தவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெருகல பிரதேச கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம்

( தோப்பூர் தினகரன் நிருபர்)

வெருகல் பிரதேச செயலகத்தின் பிரதேச கணக்காய்வு முகாமைத்துவக்குழுக்கூட்டம் வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் எம்.எம். நிசார், மற்றும் ஏ.எல்.மகரூப் ஆகியோர்களும் கலந்துகொண்டதோடு. வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.



கந்தளாய் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அல் ஹிக்மா பவுண்டேசன் அமைப்பினால் இந்த உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

படம்:கந்தளாய் தினகரன் நிருபர்

## குரங்குகளால் தொல்லை: மண்முனை தென்எருவில் பற்று மக்கள் அசௌகரியம்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை தென்எருவில் பற்று பிரதேசத்தில் களுதாவளை, களுவாஞ்சிக்குடி, தேற்றாத்தீவு, மாங்காடு உள்ளிட்ட பல பகுதிகளிலும் குரங்குளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பகல் வேளைகளில் கிராமங்களுக்கு கூட்டம் கூட்டமாக உட்புகும் குரங்குகள் மக்கள் குடியிருப்பு பகுதிகளில் தாவித்திரிவதனால் வீட்டுக்கூரைகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டு, சேதமடைவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் மழைகாலங்களில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மக்கள் குடியிருப்புக்குள் அமைந்துள்ள வாழை, மா, கொய்யா, உள்ளிட்ட பயன் தரும் பயிரினங்களையும் சேதப்படுத்தி வருவதாகவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பகலில் வேலைக்குச் சென்றுவிட்டு மாலை வேளையிலேயே வீடுகளுக்குத் திரும்பி வந்து பார்க்கும்போது குடிமனைகளை குரங்குகள் மிகவும் சேதப்படுத்தி வைத்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தை கருத்திற் கொண்டு மக்கள் குடியிருப்புக்குள் உட்புகும் குரங்குகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவையின் வளாகத்தை அழகுபடுத்தும் மரநடுகை விழா பேரவை தலைவர் விநாயகம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அபிவிருத்திக்கான சமூக முயற்சியாளர்களின் வலையமைப்பு spand உதவியுடன் நடைபெற்ற மரநடுகை விழாவில் பிரதம அதிதியாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் கலந்துகொண்டார். அத்துடன் பேரவையின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கை கல்வி சேவை உத்தியோகத்தர் மீது தாக்குதல்

### கல்வி திணைக்களத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு

(றொட்டவெவ தினகரன் நிருபர்)



இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாண பிரதி கல்வி பணிப்பாளரான எஸ்.துஸ்யந்தன் என்பவரை இலங்கை ஆசிரியர் சங்க பிரதிநிதி பீ.உதயரூபன் கடமை நேரத்தில் தாக்கியதாகவும் இதனை வன்மையாக கண்டிப்பதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

பிரதி கல்வி பணிப்பாளர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன். தாக்குதல் நடாத்திய ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை 20 ஆம் திகதி மாகாண கல்வித்திணைக்களத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்றங்கள் தொடர்பான மேல்முறையீட்டு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிரசன்னமாக இருந்த மேல் முறையீட்டு சபையின் பிரதிநிதி இல்லாத இலங்கை ஆசிரியர் சங்க உறுப்பினர் பீ.உதய ரூபன் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முதல் மாகாண கல்வி பணிப்பாளரை நோக்கி இழிசொல் பிரயோகம் செய்ததுடன், பிரதி கல்வி பணிப்பாளரை தாக்கியதாகவும் இதனை வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்து அலுவலக ஊழியர்கள் அமைதியான முறையில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.அத்துடன் இப்போராட்டத்தை தொடர்ந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.யீ.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்கவிடம் மகஜர் கடிதத்தையும் கையளித்தனர்.

## தம்பலகாமம் பிரதேச கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம்



(தம்பலகாமம் குறூப் நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலக 2023ஆம் ஆண்டின் 4ம் காலாண்டுக்கான பிரதேச கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் முன்னெடுக்கப்பட்ட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஹ்ரூப் கலந்து கொண்டு கூட்டத்தை வழிநடாத்தினார்.

உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன்,நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர,கிளைத்தலைவர்கள்,வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## 'வழிபாடு வாழ்வாகுமா' நூல் வெளியீட்டு விழா

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)




அருட்தந்தை ஜேம்ஸ் சுரேந்திரராஜாவினால் 'வழிபாடு வாழ்வாகுமா' நூல் வெளியீட்டு விழா தன்னாமுனை சூசையப்பர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை கலந்துகொண்டதுடன், இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு மாவாட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனும் கௌரவ விருந்தினராக தூய காணிக்கை அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தை தங்கத்துரை அன்ரனைனஸ் யூலியனும் கலந்து கொண்டனர்.

மறை போதித்த மனிதன் அமரர் திரு பொன்னையா பிரான்சிஸ் தங்கத்துரைக்கு நினைவு அஞ்சலி செலுத்தி முழுநேர மறை போதகர்களின் வாழ்நாள் பணிக்கான பாராட்டும் கௌரவிப்பும் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையினால் இதன்போது வழங்கப்பட்டது. இந்நூலில் கத்தோலிக்க வழிபாட்டு இறையியல் தொடர்பாக நூலாசிரியர் அருட்தந்தை ஜேம்ஸ் சுரேந்திரராஜா தனது கருத்துகளை இந்நூலின் வாயிலாக வெளிக்காட்டியுள்ளார்.

## உலக மயமாதலின் விளைவுகளால் கலாசார விழுமியங்களை இழந்து வருகின்றோம்

### அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)




குடும்ப முரண்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு பிரதேச மட்ட நல்லிணக்க சபையுடன் இணைந்து பங்களிக்க வேண்டுமென அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.

குடும்ப நல்லிணக்க சபைகளை நிர்வகிக்கும் பொறுப்பிலுள்ள உத்தியோகத்தர்களுடனான மீளாய்வுக் கூட்டம் அண்மையில் ஒலுவிலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

உளவளத்துணை உத்தியோகத்தர்கள் உட்பட பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் அனைவரும் தங்களது கடமைப் பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டும். மக்களின் குடும்ப வாழ்வில் ஏற்படும் முரண்பாடுகளை புரிந்துணர்வுடன் தீர்த்து வைப்பதற்கு பிரதேச மட்ட குடும்ப நல்லிணக்க சபையுடன் இணைந்து பங்களிக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் தெரிவித்தார்.

சமூகத்திற்கு மிகவும் தேவையான ஒரு விடயத்தை மனித எழுச்சி நிறுவனம் கையிலெடுத்துச் செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது. இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இச் செயற்பாடுகளின் சாதக விளைவுகள் முன்னுதாரணமாக, தேசிய மட்டத்தை அடைய வேண்டும். நாம் ஒவ்வொருவரும் சமூக சிந்தனையோடு செயற்படுவோமானால் சமூகத்தில் பல உறுதியான சாதகமாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

தற்காலத்தில், உலகமயமாதலின் விளைவால் நாம் எமக்கான தனித்துவங்களையும் கட்டமைப்புக்களையும் கலாசார பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் இழந்து நிற்கிறோம்.

இந்த இழப்பின் தாக்கம் குடும்ப வாழ்விலும் சமூக வாழ்விலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட மூல காரணங்களாய் அமைந்திருக்கின்றன. எங்களுக்கென்று எந்த விழுமியங்களுமே இருக்கக்கூடாது என்பது தான் நவீன காலனித்துவமான உலகமயமாதலின் குறிக்கோளாகும் என அவர் தெரிவித்தார்.





கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் முதலாம் தர மாணவர்களை அனுமதிக்கும் வித்தியாரம்ப விழா நேற்றுமுன்தினம் (22) அதிபர் சட்டத்தரணி சராப்தீன் நசீரா தலைமையில் நடைபெற்றது.

(படம் கிண்ணியா மத்திய நிருபர்)

# "எனது எதிர்காலம், எனது கனவு" மும்மொழி கட்டுரை போட்டி வெற்றியாளர்கள் கௌரவிப்பு

## 3500 இற்கும் அதிக இளம் சிந்தனையாளர்களுக்கு பரிசளித்த அமானா வங்கி

இளம் சிந்தனையாளர்களின் கனவுகள் மற்றும் சிந்தனைகள் ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் அமானா வங்கியினால் அண்மையில் "எனது எதிர்காலம், எனது கனவு" எனும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்ட அகில இலங்கை கட்டுரைப் போட்டியின் விருதுகள் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) அண்மையில் நடைபெற்றது. இலங்கை நிலைபேறான அபிவிருத்தி சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் சமிந்திரி சப்ரமாது மற்றும் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹமட் அஸ்மீர் ஆகியோர் சிறப்பு பேச்சாளராக இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




வளர்ச்சியை செயற்படுத்துவது மற்றும் வாழ்வுக்கு வளமூட்டுவது எனும் வங்கியின் நோக்கத்துக்கமைய, ஆக்கத்திறன், சிந்தனை வெளிப்பாடு மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வெளிக்கொண்டு வரும் வகையில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போட்டி கனவுகளுக்கு வலுவூட்டும் சக்தியாக அமைந்திருப்பதுடன், இளம் சிந்தனையாளர்களை வலிமைப்படுத்துவது மற்றும் முன்னால் காணப்படும் எல்லைகளற்ற வாய்ப்புகளை செயற்படுத்துவதாக அமைந்துள்ளது.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 1ஆம் இடம், 2ஆம் இடம் மற்றும் மெரிட் விருதுகள் வெவ்வேறாக வழங்கப்பட்டிருந்தது. மொத்தமாக 42 வெற்றியாளர்கள் தமது பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் போன்றோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

போட்டியில் 3,500க்கும் அதிகமான கட்டுரைகள் நாடு முழுவதிலுமிருந்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. போட்டிக்கு கிடைத்திருந்த பல்வகையான ஆக்கங்களினூடாக இன்றைய இளைஞர்களின் கனவுகளை வெளிப்படுத்த முடிந்திருந்தது.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிட வெற்றியாளர்கள் ரூ. 50,000 பணப் பரிசை பெற்றுக் கொண்டதுடன், இரண்டாமிட வெற்றியாளர்கள் ரூ. 30,000 பெற்றுக் கொண்டனர். மேலும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த ஐந்து கட்டுரைகளுக்கு தலா ரூ. 10,000 வீதம் வழங்கப்பட்டது. இளைஞர்கள் காண்பித்திருந்த திறமைகளை வெளிப்படுத்தியிருந்தது.

# ஊவா பெண் தொழில்முனைவோரை வலுவூட்டிய 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில்முயற்சி திட்டம்

Hemas Consumer Brands நிறுவனத்தின் முதன்மையான சலவை வர்த்தகநாமமான தீவாவினால் (Diva) முன்னெடுக்கப்படும் 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டமானது, Women in Management (WIM) உடன் இணைந்து முன்னெடுக்கும், பெண் தொழில் முனைவோருக்கு அவசியமான அறிவு மற்றும் திறன்களை வழங்குவதன் மூலம், இன்றைய பொருளாதார நிலையில், தன்னம்பிக்கையுடன் தங்கள் தொழில்களை மேற்கொள்ள அதிகாரமளிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.



இந்த சாதகமான தாக்கம் நிறைந்த திட்டமானது, பெண்களை உற்பத்தியாளர்கள் எனும் நிலையிலிருந்து தொழில்முனைவோராக மாறும் மன நிலைக்கு மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. பெண் தொழில்முனைவோர் சவாலை எதிர்கொள்ளும் வகையில், சிறந்த நிதி முகாமைத்துவம், விலை நிர்ணயம், சந்தைப்படுத்தல், வாடிக்கையாளர் பராமரிப்பு, டிஜிட்டல் சந்தைகள், வர்த்தகநாம பிரபலப்படுத்தல், பொதியிடல் போன்ற அம்சங்களின் மூலம் அவர்களுக்கு வணிக முறையின் அடிப்படை அம்சங்களை காண்பித்து, அவர்களை வலுவூட்டுவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தங்கொட்டுவ, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதோடு, அண்மையில் வெலிமடையிலும் இது விரிவுபடுத்தப்பட்டது. ஒவ்வொரு செயலமர்வின் போதும், இத்திட்டமானது அதன் எல்லையையும் அது ஏற்படுத்தும் சாதகமான தாக்கத்தையும் விரிவுபடுத்தியவாறு, நாடு முழுவதும் உள்ள தொழில்முனைவோரை மேம்படுத்துகிறது.

இலங்கை முழுவதிலும் உள்ள பெண் தொழில்முனைவோரை மேம்படுத்தும் இப்பயணத்தில் மற்றுமொரு மைல்கல்லான, தீவா கரத்திற்கு வலிமை தொழில்முனைவோர் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் வெலிமடை நிகழ்வு, கடந்த 2024 பெப்ரவரி 01ஆம் திகதி நிறைவடைந்தது. இந்தத் திட்டத்தில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தங்கள் திறமைகளை மேம்படுத்தவும், அவர்களின் தொழில் முனைவு கனவுகளை நனவாக்கவும் தீவிரமான செயற்பாட்டுடன் பங்கேற்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

மொத்தமாக 38 ஆர்வமுள்ள பெண் தொழில்முனைவோர் பட்டறைகள், பங்குபற்றி செயற்படும் அமர்வுகள் மற்றும் நடைமுறை பயிற்சிகளில் ஈடுபட்டு, தங்கள் திறன்களை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் வளர்ந்து வரும் சமூகமான, தீவாவினால் வலுவூட்டப்பட்ட தொழில்முனைவோரை வெலிமடை நிகழ்வு வலுவூட்டியது. இதன் மூலம் நாடு முழுவதும் மொத்தமாக 175 தொழில்முனைவோர் உருவாக்கப்பட்டுள்ளதை இந்நிகழ்வு பறைசாற்றியது.

# கலை மற்றும் கலைஞர்களுக்கு பெருமையளித்த கலா பொல 2024



இலங்கையில் வருடாந்தம் இடம்பெறுகின்ற திறந்தவெளி ஓவியச் சந்தையான கலா பொல 2024, கடந்த பெப்ரவரி 18 ஆம் திகதியன்று இடம்பெற்றதோடு, தற்போது 31 ஆவது ஆண்டை எட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1993 ஆம் ஆண்டில் ஜோர்ஜ் கீற் நிதியம் (George Keyt Foundation) கலா பொல என்ற எண்ணக்கருவுக்கு, செயல் வடிவம் கொடுத்தது. 1994 ஆம் ஆண்டு முதல் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் வர்த்தக சமூக நலன்புரி முயற்சிகளின் அங்கமாக, கலா பொல நிகழ்வுக்கு ஆதரவு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஓவியங்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வமுள்ளவர்கள் மற்றும் கலைச் சமூகத்துடன் ஓவியக் கலைஞர்கள் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதற்கு நாட்டில் மிகப் பாரிய களத்தை கலா பொல அவர்களுக்கு வழங்குவதுடன், அறிவுப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றுக்கான சந்தைக்களம் மற்றும் இடத்தையும் வழங்கி, தேசத்தின் படைப்பாக்கத்திறன் பொருளாதாரத்தை மேம்படுத்துகிறது.

இந்த ஆண்டு நிகழ்வில் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து கலந்துகொண்ட 350 க்கும் மேற்பட்ட உள்நாட்டு கலைஞர்களின் படைப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரான சந்தோஷ் ஜா நிகழ்வின் உத்தியோகபூர்வ வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துள்ளார்.

# பெப்ரவரியில் கவர்ச்சிகரமான பல்வேறு சலுகைகளை வழங்கும் வோக் ஜுவல்லர்ஸ்

அன்பையும், காதலையும் வெளிப்படுத்தும் அடையாளத்தின் மாதம் மலர்ந்துள்ள நிலையில், இந்த காதலர் தினத்தில் ஆடம்பரம் மற்றும் காலத்தால் அழியாத அழகின் நேர்த்தியுடன் உங்களது பேராவலைத் திருப்திப்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், தனித்துவமான ஊக்குவிப்பு சலுகைகள் மற்றும் புதிய தெரிவுகளை அறிமுகப்படுத்துவதை வோக் ஜுவல்லர்ஸ் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது. மிகவும் பிரபலமான OG (பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய தங்கம்) என்ற ஊக்குவிப்பு சலுகையையும் வோக் ஜுவல்லர்ஸ் பெப்ரவரி மாதத்தில் மீண்டும் முன்னெடுக்கின்றது.

அந்த வகையில், 2024 பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையில் வைர நகைகள் மற்றும் விலைமதிப்பற்ற கற்களின் ஜொலிக்கும் கொண்டாட்டத்தை வோக் ஜுவல்லர்ஸ் வழங்குகின்றது. காலத்தால் அழியாத இரத்தினக்கற்களைக் கொண்ட நேர்த்தியான ஆபரணங்களுக்கு 45% என்ற கவர்ச்சியான தள்ளுபடியை அனுபவியுங்கள். உங்களுடன் என்றென்றும் நிலைத்திருக்கும் பொலிவையும், நுட்பத்தையும் இவை ஒவ்வொன்றும் கொண்டுள்ளன. உங்கள் அன்பிற்குரியவருக்கு பாசத்தின் அடையாளமாகவோ, உங்களுக்காகவோ அல்லது எதிர்கால நலனைக் கருதிய முதலீடாகவோ என எதுவாக இருப்பினும் இந்த மட்டுப்படுத்தப்பட்ட சலுகையானது தவற விடக்கூடாத ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.



OG (பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய தங்கம்) என்ற தனது பிரபலமான ஊக்குவிப்புச் சலுகையை மீண்டும் ஒரு தடவை 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வோக் ஜுவல்லர்ஸ் வழங்குகின்றது. இது மிகவும் விசேட விலையுடன், நீங்கள் உங்களுடைய பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய ஆபரணங்களை அல்லது தங்கப்பாளங்களைப் பெற்றுக்கொள்ள இடமளிப்பதுடன், ஒப்பற்ற பெறுமதி மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்பினை வழங்குகின்றது. உங்களுடைய பழைய தங்க ஆபரணங்கள் அல்லது தங்கப்பாளங்களுக்கு பதிலாக புதிய மற்றும் தனித்துவமான, நேர்த்தியான ஆபரணங்களை வோக் ஜுவல்லர்ஸின் கைதேர்ந்த நகைக்கலைஞர்களின் அற்புதமான கைவண்ணத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

# Sri Lanka Super Series 2024: தயாராகும் SLARDAR மற்றும் AMRC

Sri Lanka Association of Racing Drivers & Riders (SLARDAR) ஆனது, Asian Motor Racing Club (AMRC) உடன் இணைந்து, அனைவரும் மிக ஆவலுடன் எதிர்பார்த்துள்ள 'Sri Lanka Super Series 2024' தொடரை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

நிகழ்வின் முதன்மை அனுசரணையாளரான Nippon Paints இன் தலைமையில், Maxxis Tyres, Prima Kottumee, Ozone Water, Sri Lanka Insurance, ESDEE Battery உள்ளிட்ட மதிப்பிற்குரிய பங்காளிகளுடன் இணைந்து SLARDAR அதிர வைக்கும் Sri Lanka Super Series 2024 தொடருக்கு தயாராகி வருகிறது. கடந்த வருடம் Sri Lanka Super Series 2023 இல், MX Motocross மோட்டார் சைக்கிள் பந்தய வீரர் லஹிரு ஜீவந்த மற்றும் SLGT வீரர் உஷான் பெரேரா ஆகியோர் முறையே சம்பியன் ரைடர் பட்டத்தையும் வருடத்தின் சிறந்த சாரதி பட்டத்தையும் வென்றனர். அதன் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து தற்போது அதன் 2024 தொடர் இடம்பெறவுள்ளது.

SLARDAR 2023 ஆம் தொடரில், கிரியுல்ல, நல்லவில் அமைந்துள்ள அதிநவீன வசதிகளுடன் கூடிய, Mahameruwa Motorsports Arena அரங்கை SLARDAR அறிமுகப்படுத்தியிருந்தமையானது, குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக அமைந்திருந்தது. இந்த சிறப்பு மிக்க போட்டி அரங்கானது, கார்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகிய இரண்டிற்குமான, உலகத் தரம் வாய்ந்த பந்தயப் பாதைகளைக் கொண்டுள்ளன. அத்துடன், உணவகப் பகுதி, நீச்சல் தடாகம், பயிற்சி அறைகள், தங்குமிட வசதிகள், ATV Track, 4x4 Challenge Track உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் இதில் உள்ளடங்குகின்றமை விசேட அம்சமாகும். SLARDAR சங்கத்தின் Nippon Paint Mahameruwa Motorsports Arena அரங்கானது, ஒரு முதன்மையான பந்தய தளமாக மட்டுமல்லாமல், சோதனை மைதானமாகவும், Driver மற்றும் Rider பயிற்சிக்கான தளமாகவும், நாடு முழுவதும் மோட்டார் பந்தய கலாசாரத்தை ஊக்கப்படுத்துவதற்கான தளமாகவும் அமைகிறது.






# மக்கள் வங்கி, 34ஆவது APB மாநாட்டு நிகழ்வின் தங்க கூட்டாளராக இணைந்துள்ளது




தொழில்முறை வங்கியாளர்கள் சங்கத்தால் (Association of Professional Bankers APB) ஏற்பாடு செய்யப்பட்டு, மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்ற 34ஆவது வருடாந்த மாநாட்டுக்கான தங்கக் கூட்டாளராக மக்கள் வங்கி பெருமையுடன் செயற்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 14ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இம்மாநாடு, வங்கித் துறையின் தொழில் வல்லுனர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர் என பெரும் எண்ணிக்கையானோரை ஈர்த்தது.

மக்கள் வங்கியின் சர்வதேச வங்கிச் சேவை பிரதிப் பொது முகாமையாளர் துஷாரி ஹேவாவசம், இதற்கான பங்களிப்பை APB தலைவர் பி.ஏ.எச்.எஸ். பிறீனாவிடம் கையளித்தார்.

மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் (வழங்கல் மார்க்க முகாமைத்துவம்) ஈ.பீ.ஏ. சிசிர குமார மற்றும் சந்தைப்படுத்தல் தலைமை அதிகாரி நாலக விஜய வர்த்தன ஆகியோரும் அருகில் உள்ளனர். வங்கிச்சேவை சமூகத்தினுள் முறையான உரையாடல் ஈடுபாடு மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றை வளர்ப்பதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பினை இந்நிகழ்வு காண்பிக்கின்றது.

# பெறுமதி மிக்க பரிசுகளோடு விநியோக சேவையாளர்களை கௌரவித்த Uber Eats




இலங்கையின் மிகவும் அபிமானம் பெற்ற உணவு மற்றும் மளிகைப் பொருட்களை விநியோகிக்கும் தளமான Uber Eats, இன்று 'Delivery Bonanza' ஊக்குவிப்பின் நான்காவது பதிப்பில் விநியோக சேவையாளர்களின் பங்களிப்பை தனது தளத்தில் கொண்டாடியுள்ளது.

நம்பகமான மற்றும் தங்குதடையற்ற விநியோகங்கள் மூலம் உண்பவர்களுக்கு சிறந்த தள அனுபவத்தை வழங்கிய மிகவும் ஈடுபாடுகளைப் பேணிய 300 விநியோக சேவையாளர்களை அது அங்கீகரித்து, கௌரவித்துள்ளது.

குறைந்தபட்ச இரத்துச் செய்தல், தரம் அல்லது பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களுடன் அதிகபட்ச விநியோகங்களின் அடிப்படையில் விநியோக சேவையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

Delivery Bonanza 4.0 இன் ஒரு பகுதியாக, கொழும்பு, கண்டி, குருநாகல், நீர்கொழும்பு, களுத்துறை, காலி, பேருவளை மற்றும் பண்டாரகம ஆகிய பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட விநியோக சேவையாளர்கள் Uber Eats தளத்திற்கு வழங்கியுள்ள தொடர்ச்சியான பங்களிப்பிற்காக ரூபா 8 மில்லியன் மதிப்புள்ள பரிசுகளுடன் அங்கீகரிக்கப்பட்டனர்.

பல்வேறு பாரிய வீட்டு உபயோகப் பொருட்கள் முதல் பல்பொருள் அங்காடி பரிசு வவுச்சர்கள் மற்றும் மழைக்கவச அங்கிகள் வரை பல்வேறு பரிசுகள் அடங்கியிருந்தன. மிகவும் கூடுதலான அளவில் ஈடுபாடுகளைப் பேணிய பதினொரு விநியோக சேவையாளர்களுக்கு வழங்கப்பட்ட மாபெரும் பரிசுகளில் மின்சாரத்தில் இயங்கும் மோட்டார் சைக்கிள், மின்சாரத்தில் இயங்கும் ஸ்கூட்டர்கள் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் சைக்கிள்கள் ஆகியவை அடங்கும்.

# சுகாதாரத் துறையை மேம்படுத்துவதில் முன்னின்று செயற்படும் மக்கள் வங்கி




வர்த்தக சமூகப் பொறுப்புணர்வைப் போற்றத்தக்க வகையில் வெளிக்காண்பித்து, சமூகத்தில் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு மக்கள் வங்கி மீண்டும் ஒரு முறை முன்வந்துள்ளது. தனது 'மஹஜன மெஹெவர' நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பொரளை காசல் வீதி மகளிர் வைத்தியசாலையில் அத்தியாவசியமான புனரமைப்புப் பணிகளுக்கு வங்கி அனுசரணையளித்துள்ளதுடன், நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சௌகரியத்திற்கு அவசியமான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு ஸ்தாபனங்கள் சமூகத்திற்கு மிகச் சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதி செய்வதற்கு அவற்றுக்கு உதவுவதில் மக்கள் வங்கியின் அர்ப்பணிப்பை இச்செயற்திட்டம் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கை எங்கிலுமுள்ள பெண்களுக்கு விரிவான பராமரிப்பை வழங்குவதில் பெயர்பெற்றுள்ள காசல் வீதி மகளிர் வைத்தியசாலை, இந்த உன்னதமான முயற்சியின் பயனைப் பெற்றுள்ளதுடன், அதன் வசதிகளுக்கு மிகவும் தேவைப்பட்ட புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள அதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வின் அடையாளமாக மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஜித் தந்தநாராயண அவர்களிடம் இதற்கான காசோலையை கையளித்து வைத்துள்ளார்.

இந்த நல்லெண்ணம் சமூக நலன்புரியில் வங்கியின் அர்ப்பணிப்பை வெளிக்காண்பிப்பது மட்டுமல்லாது, வர்த்தக உலகில் முன்மாதிரியாக செயற்படுவதில் அதன் வகிபாகத்தையும் புலப்படுத்துகின்றது.

# பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தயாராகும் இலங்கை வீரர்கள்



## உயர் செயல்திறன் குழாம் அமைப்பு

இந்த ஆண்டு நடைபெறவுள்ள பாரிஸ் ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு தயாராகும் வகையில் 58 வீர, வீராங்கனைகளை உள்ளடக்கிய உயர் செயல்திறன் குழாம் ஒன்றை விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பரிந்துரைத்துள்ளார்.

பாரிஸ் ஒலிம்பிக்கு போட்டி எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு பாரா ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் எதிர்வரும் ஒகஸ்ட் 28 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் 11 போட்டி நிகழ்ச்சிகளில் மொத்தம் 33 மெய் வல்லுனர்கள் பங்கேற்கவிருப்ப



தோடு பாரா ஒலிம்பிக்கில் எட்டு போட்டி நிகழ்ச்சிகளுக்காக 25 வீர, வீராங்கனைகள் பங்கேற்கவிருப்பதாக விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஷெமால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த 33 மெய்வல்லுனர்களில் 19 பேர் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் தடகள போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு முன்னதாக மாதாந்த கொடுப்பனவு மற்றும் வீரர்கள் பங்கேற்க தேவையான அனைத்து வசதிகளையும் நிதியையும் பெறுவதை இந்த முயற்சி உறுதி செய்வதாக உள்ளது. பாரிஸ் ஒலிம்பிக்கில் இலங்கை சார்பில் 19 தடகள வீரர்கள் தவிர பூப்பந்து (1), குத்துச்சண்டை (2), டைவிங் (1), ஜிம்னாஸ்டிக் (2), ஜூடோ (1), துப்பாக்கி சுடுதல் (2), ஸ்குவாஷ் (1), நீச்சல் (1), பலு தூக்குதல் (2) மற்றும் மல்யுத்தம் (1) ஆகிய விளையாட்டு நிகழ்ச்சிகளில் வீர, வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளன.

மறுபுரம் பாரிஸில் நடைபெறும் பாரா ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கை சார்பில் 12 தடகள வீரர்களுடன் ஏர் ரைபிள் (3), வில் வித்தை (2), நீச்சல் (2), சக்கர நாற்காலி டென்னிஸ் (2) பூப்பந்து (1), படகோட்டம் (1) மற்றும் மேசைபந்து (1) விளையாட்டுகளில் வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

பாரா ஒலிம்பில் விளையாட்டு வரலாற்றில் இலங்கை ஒரு தங்கம், மூன்று வெண்கலங்கள் என நான்கு பதக்கங்களை வென்றுள்ளது. இதில் தினேஷ் பிரியந்த 2020இல் தங்கப் பதக்கத்தை வென்றதோடு, 2016 இல் வெண்கலப்பதக்கத்தை வென்றார். 2012 இல் பிரதீப் சஞ்சய மற்றும் 2020 இல் துலான் கொடிதுவக்கு வெண்கலப்பதக்கம் வென்றிருந்தனர்.

## சர்வதேச செய்திகள்

# பாரிஸில் புதிய 'போர் நிறுத்த' முயற்சிக்கு இடையே மத்திய காசாவில் இஸ்ரேல் பயங்கர வான் தாக்குதல்

## குடியிருப்புகளில் குண்டு மழை: 40 பேர் உயிரிழப்பு

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான புதிய சுற்று பேச்சுவார்த்தை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நேற்று (23) ஆரம்பமான நிலையில் மத்திய காசாவில் இஸ்ரேல் நடத்திய பயங்கர தாக்குதல்களில் 40க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது மற்றும் அங்கு பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய சுற்று பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து பங்கேற்றுள்ளன.

எனினும் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காண தவறின. இதில் ஹமாஸ் அமைப்பின் முன்மொழிவுகளை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு "மாயையானது" என்று நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் இஸ்ரேலிய உளவுப் பிரிவு தலைவர் டேவிட் பார்னீ தலைமையில் பேச்சுவார்த்தை குழு ஒன்றை பாரிஸ் அனுப்ப இஸ்ரேல் போர் அமைச்சரவை வியாழனன்று ஒப்புதல் அளித்ததாக இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இதன்படி பலஸ்தீன போராளிகளால் பிடிக்கப்பட்டு இன்னும் அவர்களின் பிடியில் இருப்பதாக நம்பப்படும் 100க்கும் அதிகமான பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு பாரிஸ் பேச்சுவார்த்தையில் முயற்சி மேற்கொள்ளப்படவிருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏவின் தலைவர் வில்லியம் பர்ன்ஸ், கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல்ரஹ்மான் அல்தானி மற்றும் எகிப்து உளவுப் பிரிவுத் தலைவர் அப்பாஸ் பமால் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக பேச்சுவார்த்தையாளர்களுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் வியாழனன்று (22) கூறி இருந்தார்.

மறுபுறம் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே மூன்று நாள் நீடித்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின் எகிப்தில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக அந்த அமைப்பு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹனியே தலைமையிலான இந்த தூதுக்குழு எகிப்து உளவுப் பிரிவு தலைவர் அப்பாஸுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக அந்த அமைப்பு கூறியது.

எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி இஸ்லாமியர்களின் புனித ரமழான் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகளும் தீவிரம் அடைந்துள்ளன.

"மீதமுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் நீட்டிக்கப்பட்ட மனிதாபிமான போர்நிறுத்தத்தை உருவாக்கும் ஒப்பந்தத்தைப் பெற முயற்சிப்பதில் நாங்கள் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம்" என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் பிரேசிலில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அமெரிக்காவின் மத்திய கிழக்கு பிரதிநிதி பிரெட் மக்கர்க் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் எகிப்து மற்றும் இஸ்ரேலில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார். அவர் நேற்று முன்தினம் நெதன்யாகுவை சந்தித்துள்ளார்.

எனினும் பேச்சுவார்த்தையில் போதிய முன்னேற்றம் எட்டப்படாததற்கு இஸ்ரேலே காரணம் என்று ஹமாஸ் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி குற்றம்சாட்டினார். இஸ்ரேல் முந்தைய போர் நிறுத்த முன்மொழிவில் சில வாரங்களுக்கு முன் ஒப்புக்கொண்ட விதிகளில் இருந்து பின்வாங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார். "ஆக்கிரமிப்பாளர்கள் (இஸ்ரேல்) எந்த ஓர் உடன்பாட்டையும் எட்டுவதற்கு ஆர்வம் காட்டவில்லை" என்றார்.



### மத்திய காசாவில் பயங்கரம்

இந்நிலையில் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலிய தாக்குதல்களில் அதிக உயிரிழப்பு கொண்ட தாக்குதல் ஒன்றை மத்திய காசாவின் டெயிர் அல் பலாவில் கடந்த வியாழக்கிழமை இரவு இஸ்ரேல் நடத்தியுள்ளது. அங்குள்ள குடியிருப்பு கட்டடங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டிருக்கும் வான் தாக்குதல்களில் பெரும்பாலும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் என குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

மறுபுறும் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா நகரின் கிழக்கில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து நேற்று இடம்பெற்ற வான் தாக்குதல் ஒன்றில் குறைந்து ஆறு பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

இதில் சலதா பகுதியில் உள்ள வீடு ஒன்று வான் தாக்குதலில் தரைமட்டமாகி இருப்பதோடு அதில் இருந்தவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக உள்ளூர் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ரபாவில் இருக்கும் அல் பரூக் பள்ளிவாசல் தரைமட்டமாக்கப்பட்டிருப்பதோடு அருகில் இருக்கும் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

ரபா நகரல் இருந்து பத்து நாட்களுக்கு முன் இரு பணயக்கைதிகளை இஸ்ரேல் மீட்டது தொடக்கம் அங்கு தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக குடியிருப்பாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

"வெடிப்புச் சத்தங்கள் மற்றும் தலைக்கு மேலால் இடைவிடாது சுற்றித் திரியும் விமானங்களின் சத்தத்தினால் எம்மால் உறங்க முடியவில்லை" என்று ரபாவில் குடும்பத்துடன் கூடாரத்தில் வசிக்கும் 34 வயது அபூஎமத் குறிப்பிட்டுள்ளார். "அருகில் இருக்கும் கூடாரங்களில் சிறுவர்கள் அழுவதை எம்மால் கேட்க முடிகிறது. இங்கிருக்கும் மக்கள் அவநம்பிக்கையுடனும் பாதுகாப்பின்றியும் காணப்படுகின்றனர்" என்றும் அவர் கூறினார்.

இங்குள்ள குழந்தைகள் அதிர்ச்சியில் காணப்படுகின்றன என்று எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பின் தலைவர் கிறிஸ்டோபர் லொக்யியர் ஐ.நா பாதுகாப்புச் சபையில் தெரிவித்துள்ளார்.

"இந்த உளவியல் பாதிப்பினால் ஐந்து வயது சிறுவர்கள் கூட இறக்க விரும்புவதாக கூறும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளனர்" என்று அவர் குறிப்பிட்டார்.

தெற்கு காசா விளிம்பில் இஸ்ரேலிய எல்லையில் இருக்கும் ரபா நகர் மீது முழு அளவில் படை நடவடிக்கை ஒன்றை முன்னேடுப்பது குறித்து இஸ்ரேல் எச்சரித்து வருகிறது. இஸ்ரேலின் தாக்குதல்களால் காசாவின் வேறு இடங்களில் இருந்து துரத்தப்பட்ட நிலையில் தற்போது ரபாவில் அடைக்கலம் பெற்றிருக்கும் பலஸ்தீனர்களுக்கு தொடர்ந்து போக வழியில்லாமல் உள்ளது.

இதற்கிடையே ஏற்கனவே இருந்த சொற்ப உதவிகளும் தற்போது தீர்ந்து வருவது மேலும் மனிதாபிமான நெருக்கடியை அதிகரித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலை அடுத்து ஆரம்பமான இந்தப் போர் நான்கு மாதங்களுக்கு மேலாக தணிவு இன்றி நீடித்து வருகிறது. இதில் கொல்லப்பட்ட பலஸ்தீனர் எண்ணிக்கை 30 ஆயிரத்தை நெருங்கி 29,514 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 69,616 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்லப்பட்டவர்களில் 70 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் மேலும் 104 பேர் கொல்லப்பட்டு 160க்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாக அந்த சுகாதார அமைச்சு குறிப்பிட்டது. இந்தக் காலப்பகுதியில் இஸ்ரேல் 10 படுகொலை சம்பவங்களை நடத்தியதாகவும் அது கூறியது.

### காசா எதிர்காலம்

இதேவேளை போருக்குப் பின்னர் காசாவுக்கான திட்டம் ஒன்றை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் காசாவில் இயங்கும் ஹமாஸ் அரசுக்கு பதில் துறைசார் நிபுணர்களை கொண்ட சிவில் நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கும் காசாவுக்குள் பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்குவதற்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ரபா எல்லைக்கடவை உட்பட எகிப்து மற்றும் காசா எல்லையை இஸ்ரேல் கட்டுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.


பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தை மூடுவதும் நெதன்யாகுவின் திட்டத்தில் உள்ளது.

இந்தத் திட்டத்தை பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் நிராகரித்துள்ளார். அவரது உத்தியோகபூர் பேச்சாளர் நபில் அபூ ருதைனி விடுத்திருக்கும் அறிவிப்பில் கூறியதாவது, "ஜெரூசலத்தை தலைநகராகக் கொண்ட சுதந்திர பலஸ்தீன நாட்டின் அங்கமாக மாத்திரமே காசா இருப்பதோடு அது அல்லாத எந்தத் திட்டமும் தோல்வியில் முடியும். பூகோள யதார்த்தத்தை மாற்றுவதற்கான இஸ்ரேலின் முயற்சி வெற்றி பெறாது." என கூறப்பட்டுள்ளது.

"பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உலகம் விரும்புவதாக இருந்தால் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டுவந்து சுதந்திர பலஸ்தீன நாட்டை அங்கீகரிக்க வேண்டும்" என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காசா போர், பல தசாப்தங்களாக நீடிக்கும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக இரு நாட்டு திட்டத்திற்கான அழைப்பை சர்வதேச அளவில் புதுப்பித்துள்ளது. இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவும் இந்த அழைப்பை விடுத்து வருகிறது.

இரு நாட்டுத் தீர்வு என்பது மேற்குலகின் பிரதான கொள்கையாக இருந்து வந்தபோதும் 1990களின் ஆரம்பத்தில் ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்தானது தொடக்கம் பலஸ்தீன நாடு ஒன்றை அடைவதற்கான முயற்சியில் சிறிய அளவே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.




## சீன கடற்பரப்பை தவிர்க்க தாய்வான் அரசு அறிவுறுத்தல்

சீன கடலோரக் காவல் படைக் கப்பல்களுக்காக எமது கப்பல்களை நிறுத்தத் தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ள தாய்வான் கடல்சார் விவகார அமைச்சர் குவான் பிலிங்க், கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் போது சீனக் கடற்பரப்புக்கு அருகில் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கடல்சார் சுற்றுலா இயக்குனர்களுக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார். அதேநேரம் சமாதானத்தை உறுதிப்படுத்தவும் ஜியன்மென் மற்றும் கின்மென் கடற்பரப்பில் அமைதியைப் பேணவும் அவர் சீனாவுக்கு அழைப்பும் விடுத்துள்ளார்.

சீனக் கடல் எல்லைக்கு அருகில் தவறுதலாகச் சென்ற தாய்வானின் சுற்றுலா கப்பலொன்று சீனக் கடலோரக் காவல் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டதோடு கப்பலில் இருந்தவர்களின் ஆவணங்களும் பரீட்சிக்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்தே தாய்வான் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

## 50 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் நிலவில் கால் பதித்தது அமெரிக்கா



அமெரிக்காவின் டெக்சாஸைச் சேர்ந்த 'இன்டியூட்டிவ் மெஷின்ஸ்' எனும் தனியார் நிறுவனம் தயாரித்து அனுப்பிய விண்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியுள்ளது.

கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்குப் பின் அமெரிக்க விண்கலம் ஒன்று நிலவில் மீண்டும் தரையிறங்கியுள்ளது. இந்த முயற்சியில் தனியார் நிறுவனம் ஒன்று வெற்றிபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. 'அடிசியஸ்' என்றழைக்கப்படும் நிலவில் தரையிறங்கிய (லேண்டர்) விண்கலக் கருவி, நேற்று இந்த மைல்கல்லை எட்டியது.

இந்த நிறுவனமும் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவும் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளன.

தானியக்க முறையில் 'லேண்டர்' தரையிறங்கும் முயற்சியில் இடையூறுகள் வந்தபோது, பூமியிலிருந்து கிட்டத்தட்ட 384,000 கிலோமீற்றர் தொலைவில் இருந்த அக்கருவி இயக்கப்பட்டது.

கடைசியாக 1972இல் அமெரிக்காவின் அப்போலோ 17 விண்கலம் நிலவில் கால்பதித்தது. ரஷ்யா, சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளும் நிலவுக்கு வெற்றிகரமாக விண்கலத்தை அனுப்பியுள்ளன.

இதற்கு முன்னதாக அமெரிக்கா, சோவியட் ரஷ்யா, சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகள் நிலவில் வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கியது. அதன்பின் தனியார் நிறுவனம் தற்போது நிலவில் விண்கலத்தை தரையிறக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2030ஆம் ஆண்டுக்குள் மனிதனை மீண்டும் நிலவுக்கு அனுப்பும் அமெரிக்காவின் திட்டத்திற்கு பாதை வகுப்பது இத்தகைய முயற்சிகளின் நோக்கமாகும்.